www.tamilrangam.net

Raya

THEDAL 1989

5

# தேடல்

ஆனி - ஆடி

-OPAL

P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
- SEINE : FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# உள்ளே .....


1. எமது தேடலில் - ஆசிரியர் குழு
2. தலைவிதி - இரவி
3. நடைச்சித்திரம் - வித்தக பண்டிதர்
4. சீனு: அடக்குமுறையால் நசுக்கப்பட்ட... - சூர்யன்
5. நம்பிக்கை - அருந்ததி
6. அந்தமான் தீவில் - கௌதமன்
7. முற்றுப்புள்ளி - வித்தியா
8. உலக வலம் - சூர்யன்
9. இலங்கையில் இன்று -
10. உரைகல் - யாழ்ப்பாணன்.
11. பிரெஞ்சுப் புரட்சிக்கு வயது நூறு - மோகன்
12. பிரெஞ்சுப் புரட்சி இருநூறும் ஆண்டு - மறு பிரசுரம்
13. திரையுலகமேதை சத்தியஜித்ரேயின்... - அருந்ததி

www.tamilrangam.net

# எமது தேடலில்...

## துப்பாக்கி ஜனநாயகம்

தமிழர் விடுதலைக் கூட்டணி முக்கியஸ்தர்களான திரு. அமிர்தலிங்கம், திரு. யோகேஸ்வரன் ஆகியோரின் படுகொலைகள் 'ஜனநாயக விரும்பி' களின் முகத்திலே மீண்டும் ஓர்முறை கரியைப் பூசியுள்ளது. கருத்தைக் கருத்தினால் சந்திக்கமுடியாத கோழைத்தனம் ஆயுதத்தைத் தூக்கவைத்திருக்கிறது. 'துப்பாக்கிக்கு துப்பாக்கி' என்ற நியதிபோய் 'கருத்துக்கு துப்பாக்கி' என்ற காலம் வந்துவிட்டால் அதன்பின் மருந்துக்கும் ஜனநாயகப் பண்புகளைக் காண முடியாது போய்விடும்.

தொடர்ந்து கொண்டிருக்கும் கொலைகளுக்-கெல்லாம் இச்சம்பவம் சிகரம் வைத்தாற் போன்றுள்ளது. இப்படுகொலைகளுக்கான காரணத்தை வெறுமனவே, துரோகிகளுக்கான தண்டனை எனக்கூறி யாருமே இதிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்பவற்றின் கடந்தகாலச் செயற்பாடுகளை விமர்சிப்பது அவரவருக்குள்ள உரிமை. இதனை யாரும் மறுக்கமுடியாது. கூட்டணியினரது பாதையை முற்றாக நிராகரித்துக் கொண்டுதான் இளைஞர்களது ஆயுதந்தாங்கிய போராட்டமே ஆரம்பமாகியது. இதனை யாரும் இங்கு மறுப்பதற்கில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

எனவே கூட்டணியினர் தியாகிகளா துரோகி களா என்ற வாதப் பிரதிவாதங்களை எழுப் பிக் கொண்டிருப்பதல்ல இப்போதைய பிரச் சனை.

மக்கள் தான் நமக்குயுரிய முறையில் கூட்டணியினரை எப்போதோ நிராகரித்துவிட்டனரே. இதன் பின்னரும் அவர்களைத் துரோகிகள் கும்பல் என்னும் வரிசையில் சேர்த்து ஆயுத நடவடிக்கை எடுப்பதுதான் சரியா னது என்றால்......

ஒரு கேள்வி.....

அதாவது, 'தனிநாடு' கேட்டு போராட்டக் களத்திலே வரிந்துகட்டிக் கொண்டு, அவரவர்க்கே யுரிய குழப்பங்களுடன், பதவி, அதிகாரப் போட்டிக ளால் ஒருவருக்கொருவர் மல்லுக்கட்டிக்கொண்டு முட்டி மோதி சிதறுண்டு தமிழீழ விடுதலைக்கும் மக்களின் நம்பிக்கைக்கும் சேர்த்து சமாதி எழுப்பிக் கொண்டு அதிலேயும் வெற்றிக்களிப்பிடும் இந்த 'இயக்கங்' க ளுக்கான விமர்சனத்தை யார் வைப்பது? யார் தண் டனை கொடுப்பது?.

எம்மைப் பொறுத்தவரையில் கூட்டணியினரோ டு எமக்கு எந்தவிதமான உடன்பாடும் இல்லை. அவர் களது கடந்தகாலச் சந்தர்ப்பவாதச் செயல்களை— நாம் மறைக்கவும் முயலவில்லை, அல்லது அமிர்தலிங்கம் ஒரு பெருந்தலைவர், மாபெரும் தியாகி என்றெல் லாம் நாம் கொண்டாடவுமில்லை.

www.tamilrangam.net

ஆனால், இத்தனை ஆயுதந்தாங்கிய குழுக்களுக்குமத்தியிலும் ஆயுதந்தரிக்காத ஒரேயொரு குழுவினர் கூட்டணியினர்தான். அவர்களுக்கே இந்தக்கதி என்றால் நாட்டிலே இனி யார் சுதந்திரமாக வாய் திறந்து பேசமுற்படுவார்கள்? மனிதனுக்கேயுள்ள இயல்பான கருத்துச் சுதந்திரம், ஜனநாயகம் என்பவற்றின் படுகொலைகளாகத்தான் நாம் இதைக்கணிக்கிறோம்.

போராளிக் குழுக்கள் தமக்குள்தாமே அடித்துக் கொண்டபோது அவர்கள் எம்மைத் தாக்க வந்ததால் நாம் திருப்பித் தாக்கினோம்' என்று தான் காரணத்தைக் கூறிக்கொண்டனர். ஆனால், அதே காரணத்தை கூட்டணியினரின் படுகொலைக்கான காரணமாக கூறமுடியாதே. அவர்கள்தான் ஆயுதம் தரிக்காதவர்களாயிற்றே. அதனால் இப்படுகொலைகளை செய்தவர்கள் இதுவரை இதற்காக உரிமை கோர முன்வரவில்லை. இது வெட்கப்பட வேண்டியதும், வேதனைப் படவேண்டியதுமாகும்.

'ஏனெனில் இது காரணம் கூறமுடியாத,
உரிமை கோர முடியாத ஒருகாட்டு
மிராண்டித்தனம்'

இப்படுகொலைகளைச் செய்தவர்கள் யாராக இருந்தாலும் சரி அவர்கள் மனிதனது ஜனநாயக பண்புகளான பேச்சுரிமை, எழுத்துரிமை, கருத்துரிமை என்பவற்றின் எதிரிகள் என்பதோடு ஜனநாயக விரோதமான இச்செயலை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# தலைவிதி

அன்றைய
விடியலில்...
அவர்கள் –
அதன் விசையை
அழுத்துகையில்
குடிசைகள் தோறும்
அந்த ஜீவன்களின்
உடல்கள்
அநாதரவாக
தரையில்
சரிந்துகொண்டிருந்தன...

எங்கும்
சுதந்திரமாக பரந்துவீசும்
காற்றினை நுகர்ந்து
மென்றுவிழுங்கவும் கூட
இவர்களுக்கு
அனுமதி மறுக்கப்பட்டுள்ளது

ஆனால் சிலரோ –
கடதாசிகளில்
உண்டுவிட்டு
தங்களிதயத்தை பவுத்திரமாக
குளிர் பெட்டிகளில்
அடைத்து வைத்துவிட்டு
உண்டவை ஜீரணிக்க
பற்பல கோஷங்கள்....

அவர்கள் –
இவர்களின் அறியாமையை
அகற்ற முனைவதாக
ஓர் நடிப்பு...
இவர்களின் தலைவிதியை
தமதுகைகளில்
தூக்கிக் கொண்டதாக
இந்த –
வாய் வேதாந்திகள்...

இப்போது –
இவர்கள்
யதார்த்தத்துடன்
அந்தக் கூறுகளை
பிரித்தாய்வு செய்யத்
தொடங்கிவிட்டனர்

காலவோட்டத்தில்
அவர்கள் தலைவிதியின்
இறுதித்தேதி
நிர்ணயிக்கப்படுவது
தவிர்க்க முடியாத
வரலாறு.

– இரவி



www.tamilrangam.net

## நடைச்சித்திரம் - ௨

# நம்நாட்டுப் பாத்திரம்

-இந்தகப்பண்டிதர்

'கோவணாண்டிப் பொன்னர்' என்ற நாமம் பூண்ட சாஸ்திரி பொன்னம்பலத்தாரை உங்களுக்குத் தெரியுமா?

'எடே, உதில நில்லடா' வெண்ணமுந்தி, விரிச்சவிட்டுக்கத்திரயச் சிமிக்கிருமல்மடிக்குள் 'பிர செருகிச் சொண்டு, விண்மண் தெரியாமல் தலைநெறிக்கக் காதணுரம் ஓடுகின்ற சித்தி பெற்ற சண்டியர்' மாடக் செல்லத்துரை வசித்த பிநாறிமடந்தடி வராரியம்மன் கோயில் வீடுதாண்டி, நேரே கிழக்கு முகவீதி ஏறினல், முதலில் தெரிவது புளியங்குளத்தடிச் சந்தி.

அதிலிருந்து, பீச்சங்கைப்பக்கம் திரும்பினல் விசுப்புருதிதி ஆறுமுகந்தாரின் சுறுட்டுக் கொட்டிவில், கொடிச்சுவால் கந்தப்பர் எழுவீடு கேட்கும்படி கதறி, 'எழுபிச் ளைநல லதங்காள்' அம்மானையை உரத்து வாசிக்கும் சத்தம் காதைக்கிழிக்கும்.

இப்படியான நித்திய கருமங்களுக்குப் பேர்போன இந்தப் பகுதியை நினைவில் வைக்க முடியாத மறதிக்காறர், மட்றாஸ் கொக்கோ, மானிப்பாய் தவமணிதேவி நடித்துப் புகழ் பெற்ற 'மின்னல் கொடி', ஜோன்கவாஸ் நாடியா இணைந்த 'மட்றாஸ்மெயில்' ஆகிய வசுக்கோப்புகள் யாழ்ப்பாணம் படையெடுத்த 'றீகல்', 'வின்ஸர்' மடுவர்களில் சக்கைபோடு போட்ட சம்பவங்களை நினைவு கூர்வார்களாக.

அந்தப் பிரக்ஞையை இழந்தவர்கள் சிரமம் பாராமல் 'சிந்தாமணி'புகழ் தியாகராஜ பாகவதர் நடித்த 'பவளக்கொடி'யையோ, பியூ சின்னப்பா சரோஜினி ஜோடி சேர்ந்த 'ஆர்யமாலா கார்த்தவராயனை'யோ மனசில் வரவழைத்துக் கொண்டால், நமது ஸ்ரீபால செல்வச்சந்நிதிவிநாயக தேவதிருஞானசுந்தரமூர்த்திநாயனர் எழுந்தருளி யயாழ்ப்பாணத்து நல்லூர் ராஜதானியை மருவியுள்ள, கோவணாண்டி சாத்திரியார்பொன்னம்பலத்தாரை மிகச் சுளுவாகத் தெரிந்து கொள்ளலாம்.

அப்படியும் கட்டுபிடிக்கத் தெரியாமல் தவண்டையடிப்பவர்கள், இது எங்கள் தலைவிதி என்று நொந்து நமது கீர்த்தி மிக்க இலங்கைத் துப்பறியும் பொலீஸ் ஜாம்பவான்களை தேடியலைந்து தங்கள் பொன்னன நேரத்தை வீணாக்காமல், நேரே காங்கேசன் துறை வீதியில் இறங்கி, விசர் வைத்திய கலாநிதி அம்பலவாணர் ஒழுங்கைக்குள் போய் முப்பத்திரண்டாம் நம்பர் வீட்டுக்குள் பிரவேசிப்பார்களாக.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

மாந்திரீகம், சாஸ்திரம், அங்கக்குறி, கைரேகை, வசியம், நினைத்தகாரியம் என்றெல்லாம் பெருந்தொழில் பார்த்த அவரும், அவர்தம் கொள்ளுப்பேரனான இவரும், தன் பெயரைப் பரம்பரை அறுமல் 'பொன்னம்பலம்' என்றே சூட்டிக்கொண்டிருப்பவர். சதாவேளை- யும் கோவணக்கட்டோடு திண்ணையில் எடுவிரித்துப் படுத்துக் கொள்வதால், சனம், இவரைக் 'கோவணாண்டி'யென அடைமொழி சேர்த்துக்கொண்டார்கள். அவர் தான் இந்தக் கோவணாண்டி சாஸ்திரியார் பொன்னம்பலமாவார்.

வாதநாராணித் தண்டாட்டம் உடம்பு சூம்பிப்போயிருந்தாலும் நல்ல வலிச்சல்தேகம், சர்வாங்கமும் விபூதிப்பட்டை, கழுத்துமாலை, உருத்திராட்சம் கொட்டை, ஆளைப்பார்த்தால் மச்ச மாமிசம், குடிவகை, சூது, சூதியாட்டம் தள்ளுபடி என்று கூறலாம்.

இவருக்கென்று ஒரு கொள்கை கிடையாது. 'பச்சைப்பெட்டி சிவந்தப்பெட்டி'த் தேர்தல் காலத்தில், பச்சைப் பெட்டிக்கே வோட்டுப்போட்டுப்பழகிய தோஷம், தற்காலத் துப்பாக்கி வேட்டுவரை அக்காலம் தொட்டுக் கொழும்பில் யூ.என்.பிக்கும், வடக்கே தமிழரசுக் கட்சி, பெடறல்பாட்டி, தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமே வாக்களித்து வந்தவர். தேவாரம், திருவாசகம், வாயில் முணுமுணுத்தபடி இருக்கும். பண்டைய, சங்க கால, நவீன இலக்கியங்களில் அப்படி ஒன்றும் பரிட்சை கிடையாது. சாதி, சமயத்தில் இறுக்கமான நம்பிக்கையுண்டு. வேளை தவறினால் இவரிடம் மறுமாஞ்சாதி அண்டஏலாது.

இவர் தொழிலின் மகத்துவத்தை விஸ்தரிப்பதென்றால் சொல்லிமாளாது. எனவே, அதனை இவர் வாயாலேயே அவிழ்த்துவிட நினைத்து, அவருடன் சம்பாஷிக்க முனைந்த போது வலு புளுகத்தோடு புற்பாய் எடுத்துத்திண்ணையில் விரித்து அதில் பக்குவமாகக் குந்தினார்.

வாழைப்பழத்தில் ஊசி ஏற்றினசாடை கேள்வியைப்போட்ட எனக்கு, அவர் விளாசித்தள்ளினார்.

"எண் சாத்திரம் முதல் கொண்டு கொக்கோக சாஸ்திரம் வரை நான் கரைச்சுக் - குடிச்சவன். ஆனபடியால், ஒரு பெட்டையோ பொடியோ நடந்து பேசுகக்கையேஅவேயின்ர குணதோஷத்தை 'டக்'கென்டு சொல்லுவன். பத்மினி, சித்தினி, ஹஸ்தினி, சங்கரணியென்டு பொம்புளையளை நாலு வகைப்படுத்தலாம். இதில ஹஸ்தினி, சங்கரணிச் சாதிப் பொடிச்சியள்தான் என்னட்ட எக்கச்சக்கமாய் வருவினம். இவேயின்ர அங்கக்குறியிலி- ருந்து நடையுடைபாவினைய அறியலாம். கடைக்கண், இடைக்கண், முழிக்கண், நெத்திக்கண் முளிக்கண்- இப்படியெல்லாமுள்ள பார்வைக்காறியளை வசியம் பண்றதுலேசு. இப்படியான பெட்டையள் தான் வாப்பு மூப்புத் தெரியாமல் பொடியளில மாட்டுப்பட்டுக் கொண்டு திரிவினம். இப்படிநொந்து, நொடிஞ்சு, மனஞ்சோந்து போயிருந்த நேரத்திலதான் என்ர மந்திரம் இவையில வேலை செய்யும்.

"எனக்கொண்டும் விளங்கேல எப்பன் விளப்பமாச் சொல்லுங்கோ" என்று கேட்கஅவர் வல்லுவத்தை விரித்து, பாக்குச்சீவலை எடுத்து வெற்றிலையில் வைத்துத்திரட்டி வாயில் போட்டுக் குதப்பிக் கொண்டு நாக்கூற இருந்து விளக்கலானார்.

www.tamilrangam.net

"இதுக்குத்தான் மந்திரம் கால் மதிமுக்காலெண்டு சொல்றது. தந்திரம் செய்நால்
தான் மந்திரம் பலிக்கும். உதாரணத்துக்கு ஒரு கதை சொல்றன்.

"ஒரு நாள் ஒரு பொடிச்சி நினைச்ச காரியம் கேக்க வந்தது.
வந்தி குந்தினகையோடயே எனக்கு விஷயம் புரிஞ்சுபோச்சு. 'எதும்
விலங்கத்தில மாட்டுப்பட்ட பொடி பொட்டையள்தான் சாத்திரம் சம்மந்தமெண்டு
வாறதெண்டுற சங்கதி புரியாட்டி எந்தக் கொப்பனும் சாத்திரம் பாக்க ஏலாது.

"பொடிச்சியின்ர கிருத்தியங்களெல்லாம் முடிய நான் கண்ணை வெட்டிமுழிச்சு உறுதிப்பா
த்தன். பாத்த பார்வையிலேயே பெட்டை தீஞ்சு போச்சு. ஊளில இருந்த தெம்பும்
குறைஞ்சுபோச்சு. அந்த நேரம்பாத்து, "பிள்ளை, நீ ஒரு பொடியனை மனசுக்க -
வைச்சிருக்கிறாய். அது சம்மந்தமாகத் தானே கேக்கவந்தனி? யெண்டுசும்மா விடுத்துக்
கேக்க, பெட்டை வெக்கப்பட்டுக் கொண்டு மழுப்புமாப் போல அமிறிச் சிரிச்சுது.இப்
படிச் சிரிக்கேக்கயே எனக்குத் தப்பரவாக விஷயம் வெளிச்சுப் போச்சு. பிறகு -
நான் விடேல. 'புள்ள எனக்கு எல்லாம்தெரிஞ்சு போச்சு. ஒளிக்காமல் சொல்லு. நீ
ஒரு பொடியனோட தொடுப்பாயிருக்கிறாய் தானே? யெண்டு கேட்டன். பொடிச்சி
'ஓ'மெண்டு தலையாட்டிப் போட்டுத்தான் ஒடி முழிக்கிறள். 'சாஸ்திரியாரிட்டஅம்பிட்
டுப் போனனே'யெண்டு பதறின விதத்தை நான் கண்டு பிடிச்சிட்டன்.

"பொடியன் கொஞ்சம் பின்னடிக்கிற மாதிரித் தெரியுது. சரி பரவாயில்லை நான்
இதை ஒப்பேத்தி வைக்கிறன். ஆனால், கொஞ்சம் செலவு வரும். அது உன்னால் ஆகுமா
வெண்டுகேக்க, பொடிச்சி,என்னெண்டாலும் தாறன், சரிக்கட்டித்தாருங்கோ' வெண்டு
நாண்டு கொண்டு நிண்டாள்.

"இவ்வளவுக்கும் நான் செய்தது ஒண்டுமில்லை.?சொன்னதும் பொய். சும்மா ஒருஊகத்
திலதான் சொன்னனான். இந்தத் தொழிலின்ர மகத்துவம் இதிலதான் தங்கியிருக்கு.சாஸ்
திரம் கேக்கவாற ஆளைத் திகைக்க வச்சு மட்டக்கிப் பிடிக்கிறது தான் கெட்டித்தன
மேதவிர, சாத்திரம் கோத்திரமெல்லாம் சும்மா பம்மாத்துக்குச் செய்யிற வேலை
தான். இதுகளையெல்லாம் தெரிஞ்சபடியால் தான் பரம்பரை பரம்பரையாக ஒருத
ரையும் ஏமாத்தாத மாதிரி ரம்ப நடந்து இந்தச் சாஸ்திரத்தொழிலைச் செய்து --
சொல்லுவாறன்......."
உண்மையில் நான் திகைத்துப் போனேன்.

"அப்ப சாத்திரம் சமயம் எல்லாம் பொய்யோ? என்று அடுத்துக்கேட்டேன்.

"பொய்யில்லாமல் பின்ன என்ன மெய்யோ?" என்று அவர் என்னை விடுத்துக் கேட்
டார்.

'எடகோதாரி, அப்படியே சங்கதி ? அப்ப,நான்தான் மிகத் திறமான நல்ல
மொக்கன்.........' ●●●




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# சீனா: அடக்குமுறையால் நசுக்கப்பட்ட ஓர் அமைதிப்போராட்டம்!!

- சூர்யன்



சீன மாணவர்கள் நிகழ்த்திய ஜனநாயகம் கோரும் வீரமிகு போராட்டத்தைப் பற்றி சென்ற இதழில் எழுதிய மை உலரும் முன்னரே அந்த வீரமிகு மாணவர்கள் நடத்திய போராட்டம் கோரத்தனமான அடக்குமுறையால் நசுக்கப்பட்ட சோகத்தை எழுதவேண்டிய - நிலை வந்து விட்டது.

அதிக ஜனநாயகம் கோரி, ஆயுதம் தரிக்காது அமைதிவழிப் போராட்டம் மேற்கொண்ட மக்கள் மீது தன்னை மக்கள் அரசாங்கம் என்று கூறிக்கொள்ளும் சீன அரசாங்கம் இந்த நூற்றாண்டில் மிக மோசமான அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டது. எந்த மக்கள் இராணுவம் மக்களைக் கொல்லாது என்று கூறினார்களோ அதே மக்கள் இராணுவம் அப்பாவி மக்களையும் மாணவர்களையும் கொன்று குவித்தது.

www.tamilrangam.net

இந்த நூற்றாண்டின் வேதனைக்குரிய சம்ப
வங்கள், சீன அரசாங்கம் வெட்கித் தலைகுனிய வேண்டிய
இந்தச் சம்பவங்கள் யூன் மாதம் 3ம் திகதி சனிக்கிழமை
ஆரம்பமாகின.

மேற்படி 3ம் திகதி அதிகாலை ஒரு
மணிக்கு ஏராளமான வாகனங்களில் பல ஆயிரக்கணக்கா
னராணுவத்தினர் பீஜிங் நகருக்குள் வர ஆரம்பித்தனர்.
இதுபோலவே பல்லாயிரக்கணக்கானோர், இலட்சக்க -
ணக்கான மாணவர்களும், மக்களும் குழுமி நின்ற தியனன்
அன்மென் சதுக்கத்தை சுற்றி வளைக்க ஆரம்பித்தனர்.

அதிகாலை 2 மணியளவில் சுற்றி வளைப்
பில் ஈடுபட்ட இராணுவம் முன்னேறும் மக்கள் தடுக்க
ஆரம்பித்தனர். பஸ்கள் மற்றும் இதர வாகனங்களை உப
யோகித்து டாங்கிகளும் கவச வாகனங்களும் முன்னேறு-
மல் தடுத்தனர்.

காலை 7 மணியளவில் இராணுவம் தடை
களை தகர்க்க ஆரம்பித்தது. நண்பகல் 12 மணிக்குமுதல்
தடவையாக பொலிஸ் பிரிவினர் அப்பாவி மக்கள் மீதான
தாக்குதல்களை ஆரம்பித்தனர். பீதி கொண்ட மக்களில்
30க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். பிற்பகல் 2
மணியளவில் சினம்கொண்ட மக்களும் பதிலடியாக போத்
தல்களையும் தடிகளையும் இராணுவத்தின் மீது வீச ஆரம்
பித்தனர்.

பிற்பகல் ஆறு மணியளவில் பீஜிங்கின் மக்
கள் அரங்கத்திற்கு முன்னால் மக்கள் இராணுவத்தினருடன்
தர்க்கம் செய்ய ஆரம்பித்தனர். அதேசமயம் அதற்க
ருகே மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்களும் மாண
வர்களும் குழுமி நின்று இந்த அடக்குமுறைகளின் காரணகர்
தாவான சீனப் பிரதமர் லீ பெங் ஒழிக என்று கோச
மிட ஆரம்பித்தனர்.

இரவு 9 மணிக்கு அரசின் தொலைக்காட்
சிச் சேவை சீருவில் இராணுவச் சட்டம் பிரகடனப்படுத்
தியிருப்பதை மீண்டும் அறிவித்தது மிகக் கடும் நடவடிக்கை-
கள் எடுக்கப்படுமெனவும் அறிவித்தது. அத்துடன் மக்களை
வீடு திரும்புமாறு எச்சரித்தது.

www.tamilrangam.net

இரவு 10 மணிக்குச் சற்றுப் பின்னர் ஆயுதப்படையினரின் துப்பாக்கிகள் அப்பாவி மக்கள் மீதும் மாணவர்கள் மீதும் சுட ஆரம்பித்தன. எந்த மக்கள் இராணுவம் தனது மக்களை சுடாது என்றார்களோ அதே மக்கள் இராணுவம் தனது முகமூடிகளை கழற்றி வைத்து தன் அடக்கு முறைச் சுயரூபத்தைக் காட்ட ஆரம்பித்தது.

ஞாயிறு அதிகாலை 1 மணியளவில் 250 கும் மேற்பட்ட பாரிய வாகனங்களில் தியன் அன்மென்சதுக்கத்தில் கொண்டுவந்து குவிக்கப்பட்ட இராணுவம் அப்பாவி மக்கள் மீது தனது அடக்குமுறை இராச்சியத்தை – ஆரம்பித்தது.

அதிக ஜனநாயகம் கோரி அமைதிப் போராட்டம் நடத்தியவர்களின் உடல்களை இயந்திரத் துப்பாக்கிகளும், கனரக ஆயுதங்களும் துளைத்தன. தியன் அன்மென் சதுக்கத்தில் இரத்தம் சிந்தியது. நள்ளிரவு வரை கொலை வெறியாட்டம் தொடர்ந்தது.

கொல்லப்பட்டவர்கள் எத்தனை பேர் என்று இதுவரை யாருக்கும் தெரியாது. 1000 லிருந்து 3000 பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

தன் அடக்குமுறை வெறியாட்டங்கள் எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு தனது மக்களைநானே கொலை செய்த வெறித்தனத்தை தன்னுடைய வெற்றிச் செய்தியாக சீன அரசு அறிவித்தது.

அமைதிப் போராட்டம் நடத்தியவர்களுக்கு எதிர்ப்புரட்சியாளர்கள் என்று பட்டம் சூட்டியது. சீன மக்கள் இராணுவத்தை தாக்கி அரசைக் கவிழ்க்க முயன்ற எதிர்ப்புரட்சியாளர்கள் மீது மக்கள் இராணுவம் வெற்றிகரமாக எதிர் நடவடிக்கை எடுத்தது என்று பொய்களை அவிழ்த்து விட்டது.

www.tamilrangam.net

பலநூற்றுக்கணக்கான மக்கள் இராணு-
வத்தினர் கொல்லப்பட்டதாகவும், மாணவர்கள் வெளி-
நாடுகளின் உதவியுடன் சதிசெய்வதாகவும் சீன அரசு அறி
வித்தது. பாமர மக்களை நம்பச் செய்வதற்காகபுனை
யப்பட்ட பொய்யான செய்திகளை தொலைக்காட்சியில்
ஒலிபரப்பியது.

அத்தோடு அரசின் அடக்குமுறை ஓய
வில்லை. வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் வெளியிட்ட
ஆர்ப்பாட்ட படங்களைப் பாவித்து மேற்படி போராட்
டங்களில் பங்கு பற்றிய மாணவர்களை வேட்டையாடஆர
பித்தது. இதுவரை 1700 க்கும் மேற்பட்டோர் கைது
செய்யப்பட்டுவிட்டனர். இன்னும் பலர் தேடப்படுகின்ற-
னர். ஜனநாயகத்துக்காகப் போராடியவர்களை சிறி



மினல் குற்றவாளிகளை விட மோசமாக நடத்தியது. அது
மாத்திரமல்ல இவர்களில் 27பேருக்கு ஏற்கனவே மரண
தண்டனை விதித்து அத்தண்டனையை நிறைவேற்றியும்விட்டது.
மேலும் பலர் இந்த நூற்றாண்டின் மோசமான மிருகத்த-
னத்துக்கு பலியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேசமயம் தம்முடைய சொந்த மக்
களைக் கொன்று அந்த இரத்தத்தை தங்கள் கரங்களில்
பூசி இருக்கும் சீனத் தலைவர் டெங்கும் பிரதமர் லீ
பெங்கும் தங்கள் அடக்குமுறை அரசைவலுப்படுத்துவதற்-
காக மேற்படி மாணவர் போராட்டங்களுக்கு ஆதரவ
ளித்த கட்சியின் செயலாளர் சாவோசியாங்கை கட்சியின்
சகல பதவிகளிலுமிருந்து நீக்கியதுடன் அவர்மீது விசாரணை
கள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்துள்ளனர்.

எந்த தேசத்தில் தோழர் மாவோஆயிரம் பூக்கள் மலரட்டுக்கும், ஆயிரம் கருத்துக்கள்மோதட்டும் என்று சொன்னாரோ அந்த தேசத்திலேயே, தேசத்தின் அரசால் ஆயிரக்கணக்கான மாணவப் பூக்கள் அழிக்கப்பட்டு அரசின் கொள்கைக்கெதிராக எந்த கருத்துமே எழாமல் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டிருப்பது பெரும் சோகம் தான்.

---

வ. ஐ. ச. ஜெயபாலன்

---

நடந்தால் ஹர்த்தால் ஓடினால் ஹர்த்தால்
எடுத்ததற் கெல்லாம் ஹர்த்தால் வைத்து
என் செயப் போகிறீர்? என் செயப் போகிறீர்?
எதிரிகள் சிதைக்கும் பொருளாதாரத்தின்
மிச்சம் மீதியை நீங்கள் ஏன் சிதைக்கிறீர்?
அரசியல் என்பது துப்பாக்கி மட்டுமா?
எதிரிக்கு எதிராய்த் துப்பாக்கி என்றும்
மக்களுக்கும் சக இயக்கத்துக்கும்
பலத்தைக் காட்ட ஹர்த்தால் என்றும்
ஏன் முடிவெடுத்தீர்?
எரிச்சல் மிகுந்து வெறுப்பாய்ச் சிரித்தேன்...
ஹர்த்தால் என்பது மக்கள் செய்வது...
ஈழ மண்ணில் ஹர்த்தால் என்பது
ஏதோ ஓர் இயக்கம் பிரகடனம் செய்யும்
ஊரடங்கு உத்தரவன்றோ?
வெடிகுண்டெறிந்தும் துவக்கைக் காட்டியும்
வீதியை விட்டு மக்களை விரட்டுவீர்
வயல்களை விட்டு மக்களை விரட்டுவீர்
கடைத்தெரு விருந்து மக்களை விரட்டுவீர்
கடலில் இருந்தும் மக்களை விரட்டுவீர்...
எதிரியாலே சுருங்கிப் போன
உற்பத்தி நேரத்தை உறுதிப் படுத்திடும்
உமது கடமையை எப்படி மறந்தீர்?
பண்டமும் சேவையும்
உமது துப்பாக்கிக் குழலால் வருமோ?

ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும்

www.tamilrangam.net

# அந்தமான் தீவில்....

- கௌதமன்

கணேசனுக்கு அன்று முழுவதும் வேலை செய்வதற்கே வெறுப்பாக இருந்தது, வாழ்க்கையே அஸ்தமித்துவிடுவது போன்ற ஒரு உணர்வு அவனுக்கு. ஒருவாறு வேலையை முடித்துக் கொண்டு வீடு திரும்பினான். தான் அறிந்த செய்தியை தனது நண்பர்களிடம் கூறி பாரத்தை இறக்கி வைக்கும் வரை கணேசனின் நெஞ்சில் கனம் அவனை அதிகமாகவே அழுத்திக் கொண்டிருந்தது.

சப்பாத்தை மூலையில் கழட்டிவைத்து யக்கட் சட்டை கழட்டியவாறே பாரத்தைக்குறைக்க முயன்றான் கணேசன். "விசயம் தெரியுமா நாங்கள் எல்லாரும் அந்தமான் தீவுக்குப் போகப் போறம்"?

"எனக்குத் தெரியும் வட்ரக்காக ஏதாவதொண்டோடை தான் வாருவார் என்டு, என்ன இருந்தாப் போலை அந்தமான் தீவுக்கு, போதா குறைக்கு எங்களையும் இழுத்துக் கொண்டு?" 'ரீ'யைக் கையில் வைத்தவைத்துக் கொண்டே சொன்னான் நாதன்.

நாதன் அந்த வீட்டின் உரிமையாளர்.

பரிஸைப் பொறுத்தவரையில் ஓரளவு வசதியான வீடு அது. நாதன், மனைவி சிவகாமி, மூன்று வயது மகள் வானதி, சிவகாமியின் அப்பா சிவப்பிரகாசத்தார், நாதனின் நண்பர்கள் சுரேஷ், கணேசன் ஆகியோரை உள்ளடக்கியிருந்தது அந்த வீடு.

ஏதோ ஒன்றை இழப்பது போன்ற மனோநிலையில் இருந்த கணேசனுக்கு நாதனின் பேச்சு எரிச்சலைக் கொடுத்தது. இருந்தாலும்அடக்கிக்கொண்டு "நீங்கள் ரீ.வி. பாக்கேல்லையே மத்தியானம் செய்தியிலை சொன்னவங்கள். எனக்கு அரைகுறையாகத் தான் விளங்கினது. பிறகு என்ர பத்துரேன் விளங்கப்படுத்தினவன்".

'என்ன என்ன விசயம்' புதினம் அறியும் ஆவலில் அங்கலாய்த்தான் சுரேஷ்

"இலங்கைத் தமிழ் அகதிகளெல்லாரையும் பிடிச்சு அந்தமான் தீவுக்கு அனுப்பப்போறாங்களாம்".



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

'என்ன என்ன??

வீட்டிலிருந்த எல்லோரும் பேயறைந்தவர்கள் போலக் கணேசனைப் பார்த்தனர் வானதியைத் தவிர. அப்பா கூட சாய்வுக் கதிரையில் சாய்ந்திருந்தவாறே ஆச்சரியம் கலந்த பார்வை பார்த்தார்.

சிவப்பிரகாசத்தாரை வீட்டுக்கு வருவோர் போவோர் உட்பட அனைவரும் அன்புடன் அப்பா என்றே அழைத்தனர். அப்பாவுக்கு வயது எழுபதுக்கு மேல். அப்பாவின் ஒரே மகள் சிவகாமி அப்பாவை சொந்த மண்ணில் தனித்து விட விரும்பாமல் தன்னுடன் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறாள்.

அப்பாவைப் பொறுத்தவரையில் பாரிஸ் வாழ்க்கை பெரிய விசர். ஒவ்வொரு கணங்களும் ஒவ்வொரு யுகங்கள் போல அவருக்கு. சிவகாமியும் அப்பாவை வருத்த வேண்டும் என்ற நோக்கில் அவரை இங்கு வரவழைக்கவில்லை. பாசத்தின் நிமித்தமாகத்தான். சிவகாமியோ நாதனோ - இன்று வரை அப்பாவின் பரிதாப நிலையை விளங்கிக்கொள்ளும் பக்குவத்தில், இல்லை. அப்பாவும் பாரிஸ் பார்க்கும் ஆர்வத்தில் வந்தவர். ஒரு மாதத்தில் ஆசையெல்லாம் தீர்ந்துவிட்டது. அவரையொத்த வயதினர் நண்பர்கள் இங்கில்லை. எல்லாம் இளவட்டங்கள். அப்பா ஏதாவது கதைக்க வெளிக்கிட்டால் சிரிப்பு ஒருபுறம், மறுபுறம்...ம்...கிழடு அறுக்கத் தொடங்குது என்று மனசுக்குள் முணுமுணுத்தவாறே 'நைஸாகக் கழன்று விடுவார்கள். பேத்தியும் காலையில் பள்ளி சென்றால் மாலை தான் வருவாள். எப்போதாவது நாதன் குடும்பம் சென்றுவரும் கொண்டாட்டங்களில் அப்பாவும் பங்கெடுத்துக் கொள்வார் அவ்வளவு தான்.

"பிரான்ஸ் மட்டுமில்லை. மேற்கு நாடுகளிலை இருக்கும் எல்லாரையும் தான் அந்தமானுக்கு அனுப்பப் போறாங்களாம். கிட்டத் தட்ட இரண்டு லட்சம் தமிழர்கள். இந்தியா தவிர்ந்த ஏனைய நாடுகளில் அகதிகளாக இருக்கினமாம்" என்று கூறினான் கணேசன்.

'கிட்டத்தட்ட வரும்' இடைச்செருகல் செருகினார் நாதன்.

"அதுக்கிப்ப என்னவாம் ?ஏதோ கணேசனே பிடித்தனுப்பப்-போகின்றான் என்பது போல கதை சொன்ன கணேசன் மேல் சீறிப் சீறிப் பாய்ந்தாள் சிவகாமி அக்கா.

'எப்பவோ தொடக்கம் இது சம்பந்தமாக மேற்கு நாடுகள் ஆராய்ந்து கொண்டிருந்ததாக நானும் கேள்விப்பட்டனான்'. தான் அறிந்ததை வைத்து மேல் தொடர்ந்தான் சுரேஷ் -

www.tamilrangam.net

'மேற்கு நாடுகளிலே வர வர இலங்கைத் தமிழ் அகதிகளின் தொகை கூடிக் கொண்டே வருகுது. இந்நிலையைக் கட்டுப்படுத்தவும் இந்நாடுகளாலே முடியேல்லே. அதோட இருக்கின்ற அகதிகளிலும் சிலர் விடுகின்ற தவறுகள் எல்லாத் தமிழரையுமே பாதிக்குது. தமிழ் அகதிகள் மேல் இருந்த நல்லபிப்பிராயமும், அனுதாபமும் வர வரக் குறைந்து கொண்டே போகுது. ஒரு பக்கத்தில், இலங்கைத்தமிழ் அகதிகள் வசதிவாய்ப்புத் தேடியே மேற்கு நாடுகளுக்கு நுழைகிறார்கள் என்ற கருத்து இந்த நாட்டு அரசுகள் மத்தியில் சற்று அழுத்தமாகிக் கொண்டே போகிறது.'

"எங்கடை சனங்கள் எங்கைதான் வாழவிடுகுதுகள் சிட்டுது கள் எரிச்சலுடன் வேதனையை வெளியேற்றினு சிவகாமியக்கா. அதுக்ககள் தம்பி அந்தமான் தீவுக்குக் கொண்டு போறுங்கள் . இது அப்பாவின் கேள்வி.

'அந்தமான் தீவுக்கு அனுப்பிறதிலே இரண்டு காரணங்களிருக்கு ஒன்டு இந்த நாடுகள் எதிர்பாக்கிறது போலே அகதிகள் வருகையைக் கட்டுப் படுத்திறது. இரண்டாவது இப்ப இங்கை சில நாடுகள் எங்களைச் சும்மா வைச்சுப்பராமரிக்குதுகள். அந்தமான் தீவு மாதிரி ஒரு நாட்டிலே வைச்சுப் பராமரிக்கிறதென்டால் செலவும் எவ்வளவோ குறைவு. அப்படித்தான் நான் நினைக்கிறன்.'

"உண்மைதான்", இருந்தபடியே தலையாட்டி ஆமோதித்தான் நாதன். 'பிரான்சைப் பொறுத்தவரையில் அப்படியில்லையே. நாங்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டு உழைச்சுத்தானே சீவிக்கிறம். எங்களாலே என்ன நட்டம் வந்திட்டுது பிரான்சுக்கு'. அழாக்குறையாகக் கேட்டான் கணேசன்.

"கணேசன் சொல்லிறதிலேயும் ஒரளவு நியாயம் இருக்கிறது - மாதிரி இருந்தாலும் எல்லா நாடுகளும் எந்த ஒரு முடிவு எடுச்கேக்கைபிரான்சும் ஒத்துப்போகத்தானே வேணும் என்ன சுரேஷ் என்று சுரேசைப்பார்த்துப் பதிலளித்த நாதன் மேலும் தொடர்ந்தான்.

'என்னைப் பொறுத்த வரையில் இதுவும் ஒருவிதத்திலே நல்ல தாம்த்தான் படுகுது'

"உங்களுக்கு எதுதான் கூடாமல் படுகுது". ஆத்திரத்தில் சீறி விழுந்தா சிவகாமி அக்கா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

ஏனென்டால் இப்பிடி இந்த நாடுகள் சேர்ந்துமுடிவெடுக்கிறது. எங்களையும் கொஞ்சம் யோசிக்கப்பண்ணுது, எங்கடை நாட்டையே மறந்து கொஞ்சம் கொஞ்சமாக எங்களையறியாமலே இஞ்சை வேரைவிட வெளிக்கிடுறம். ஆனால் எங்கடை நாட்டின்ரை நிலை......? நான் இஞ்சை இருந்து கொண்டு கதைக்கிறன் என்டு நினைக்காதேங்கோ உண்மையைத்தான் சொல்லுறன்.

எல்லாரும் இஞ்சை இருந்துகொண்டு பந்தபாசங்களை மறக்காமல் இருக்கிறவையளுக்கு மேலும் மேலும் காசுகளை அனுப்பிக் கொண்டிருக்கிறம் அங்கை இந்தக் காசைப்பாக்கிற சகலருக்கும் வெளிநாட்டு ஆசை வரும். அது இயற்கைதானே. இலங்கையில் இருந்து ஒரு டாக்குத்தராலை உழைக்க முடியாததை இஞ்சை சாதாரண ஒரு கூலி வேலை செய்யிற ஒருத்தரால உழைக்கமுடியுமென்டால் யாருக்குத்தான் வெளிநாட்டு மோகம்வராது. அதோடை மரணத்தோடையே போராடி வாழ்க்கை நடாத்திக்கொண்டிருக்கிற சனங்கள், வசதிகள் என்றால் வெளிக்கிடத்தான் விரும்புங்கள்.

இந்நிலை தொடர்ந்து கொண்டு போனால் எங்கடை சமூகத்தின்ரை எதிர்காலம்.....? இதுகளைப் பற்றி யார்தான் யோசிக்கிறம். இப்பவே பள்ளிக்கூடங்கள் குழப்பப்பட்டு படிப்புகள் சீரழிக்கப்பட்டதன் ஒரு பக்க விளைவுகளைக் கண்கூடாகவே பார்க்கிறம். அதோடை இப்ப இருக்கிற ஓரளவு படிச்ச மட்டங்களும் வெளிக்கிட்டு விட்டால்.... எங்கடை நாட்டிலை இனப்பிரச்சனை என்டு எல்லாரும் சொல்லுகினம். ஆனால் என்னை கருத்து அதிலை எங்கடை பிரச்சனையளுக்கு முக்கிய காரணம் எங்கடை சமூகத்தின்ரை சிந்தனை வளர்ச்சிக்குறைவுதான்.

"மஞ்சர் இருக்கிற விசருக்கிள்ளை இவர் வேற அரசியல்" நாதனின் பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைக்க முனைந்தான் கணேசன். கணேசனுக்கு அரசியல் என்றால் என்ன என்று தெரியாத காரணமோ என்னவோ அரசியல் மேல் ஏதே வெறுப்பு. இத்தனைக்கும் கணேசன் பிரான்சு நாட்டில் அரசியல் தஞ்சம் கோரியிருக்கும் அகதிகளில் ஒருவன்.

"எனக்கென்னவோ எங்கடை வரலாறும் செவ்விந்தியரின்ரைவரலாறு போலத்தான் போகும்போல கிடக்கு"

படக்கென்று சொல்லிவிட்டு பேச்சை நிறுத்தினார் நாதன்.

"அதுசரி எப்ப அனுப்பப்போறீங்களாம்"!

அப்பாவும் அடுத்த நாடு பார்க்கிற மெல்லிய ஆசையில் கணேசனைப் பார்த்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

'ஆகஸ்ட் 15ம் திகதியாம்'

வேண்டாவெறுப்பாகப் பதிலளித்தான் கணேசன்.

●

பாரிஸில் பெரும்பாலான தமிழர்களின் முகங்கள் களை இழந்து காணப்பட்டன. அந்த ஒரு மாத காலமும் அநேகரால் உணவு உட்கொள்ளவே முடியவில்லை. சிலர் தங்கள் கவலையை 'விஸ்கி'யிடம் முறையிட்டு ஆறுதல் பெற்றுக்கொண்டனர். சிலர் குறிப்பாக பெண்கள் அழுது தீர்த்துக்கொண்டனர்.

ஆகஸ்ட் 15ல் ஒருவாறு எல்லோரும் அந்தமான் தீவுக்கு அனுப்பப்பட்டனர். கடைசிநேரத்தில் சிலர் அந்தந்த நாடுகளில் களவாகத் தங்கிவிட எடுத்த முயற்சிகள் அந்நாட்டு அரசுகளின் கடுமையான நடவடிக்கைகளினுல் முறியடிக்கப்பட்டன.

அந்தமான் தீவில் சகலருக்கும் வசதியான இருப்பிட வசதிகள் உணவுகள், உடைகள் அனைத்தும் வழங்கப்பட்டன. முதலாவது மாதம் சற்று கடினமாக இருந்தாலும் போகப்போக அனைவரும் பழக்கப்படுத்திக் கொண்டு விட்டனர். ஆறுமாத காலத்திற்குள் அங்கேயும் தமிழ் வர்த்தக நிலையங்கள், வீடியோ கிளப்புகள், வியாபார ஸ்தாபனங்கள் சகலதும் தோன்றிவிட்டன.

மேற்கு நாடுகளில் சற்று மறைந்திருந்த சாதிப்பிளவுகள் அந்தமான் தீவில் பழையபடி மெதுவாக ஊசலாடத் தொடங்கியது. அதைவிட பாரிஸ் தமிழர், ஜேர்மன் தமிழர், சுவிஸ் தமிழர்..... என பிளவுபட்டு இலேசான மோதல்களும் வளரத் தொடங்கின. ஜேர்மன் கழகம், சுவிஸ் கழகம், பாரிஸ் கழகம் என விளையாட்டுக்கழகங்களும் உருவாகியிருந்தன. கலைச்சங்கங்களும், தென்னிந்திய நடிகர், நடிகைகளை, பாடகர்களை வரவழைத்து கலைச் - சேவை புரிய ஆரம்பித்தன. மொத்தத்தில் இலங்கைத் தமிழர்களினுல் அந்தமான் தீவு களை கட்ட ஆரம்பித்தது.

ஒரு நாள் கலைச்சங்கம் ஒன்று தென்னிந்திய கவர்ச்சி நடிகை ஒருத்தியை வரவழைத்து 'இனிக்கும் மாலைப் பொழுது' நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. நாதன் குடும்பம் நிகழ்ச்சிக்குச் சென்றிருந்தது.

நிகழ்ச்சி ஆரம்பமாவதற்கு சற்று முன்னதாக கோஷ்டிமோதல் ஒன்று உருவாகிவிட்டது. மது அந்தமான் தீவிலும் விளையாடியது. கலைச்சங்கத்தினர் எவ்வளவோ முயன்றும் மோதலைத் தணிக்க முடியவில்லை. போத்தல்கள் கதிரைகள், பறந்து விளையாடின. நிகழ்ச்சி மண்டபம் அல்லோலகல்லோலப்பட்டது. பறந்து வந்த சோடாப் போத்தல் ஒன்று அப்பாவின் மண்டையைப் பதம் பார்த்தது. அ...ஆ...ஐயோ என்றார் அப்பா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

'என்ன நாத்தா' மழலைக்குரலுடன் தாவிவந்து நாதனின் கையைப்பிடித்தாள் வானதி. சாய்வுக்கதிரையில பனிக்குளிரிலும் வேர்க்க விறுவிறுக்கத் தூங்கிக் கொண்டிருந்த சிவப்பிரகாசத்தார் கண்களை மெல்லத் திறந்தார்.

முற்றும். .

-கௌருமன்-

# நம்பிக்கை

வானம் நிர்மலமாக.....

மனசுக்குக் கிடைக்காத
வரப்பிரசாதம்,

நினைவுகளில்
இடறி வீழ்வதும்
எழுவதும்.....

இருள்காவு கொண்ட
வாழ்க்கை வெளிச்சங்கள்

தொலைவுகளில்
முகம் மறைக்கும் திரைகளுக்காக
நீளும் கைகள்,

வானம் தொடும் பூமியின்
தூரமாய்...
இருந்தும் இன்னும்
தளராதவைகளாய்...

புற்களும்
பூமியின் மைந்தர்களும்,

புதிது புதிதாக
இடறுவதும் எழுவதும்
உயிர்ப்பிலிருக்கும்
சில நாட்களுக்காய்...

கதவுகளும் மூடிக்கொண்டன,
விடைபெற்றுக் கொண்டவைகள்
காற்றும் வசந்தமும்
எல்லாமும்.....

இருந்தும்
இன்னும்.... இன்னும்...

- அருந்ததி.

www.tamilrangam.net

# முற்றுப்புள்ளி.

என் நினைவுகள்
இங்கே எழுத்துக்களாக...
என் அழுகை
ஆவேசமாக மாறி
அச்சுக்கோர்க்கப்படுகின்றன

அடுப்பங்கரையையும்
படுக்கை அறையையும்
தங்குமிடங்களாக
எங்களுக்கு காட்டியவர்கள்

அவர்களின்
நித்திய பூஜைக்கு
நாங்கள் குத்துவிளக்குகள்
எழுதப்பட்ட இலக்கியங்களைப்
புரட்டிப் பார்த்தால்....
எல்லாமே எதிரானவை தான்

இந்த இலட்சணத்தில்
அவை -
சாகாத இலக்கியங்கள்
எழுதுகிறார்கள்...
இவர்கள்
எழுதிவைத்த குப்பைகள்
புனிதமான
சாத்திரங்களாம்

கவிஞனே புலவனே
இளைஞனே சாதாரணவன்
எவனாக இருந்தாலும்
அவர்களின் கண்ணுக்கு
நாங்கள் போதைப் பொருட்கள்

விதி விலக்கு இருக்கலாம்
ஆனால் அவற்றாலும்
வெளிச்சம் பெற
முடியவில்லையே,

எங்களின் பாவாடையையும்
தாவணியையும் பார்க்கும்
அவர்களுக்கு
எங்களின் இதயமும் உணர்ச்சியும்
தெரிவதில்லை

பிறப்பு முதல் இறப்பு வரை
ஒவ்வொரு நிலையிலும்...
எங்களுக்கு தீர்ப்பு..

இத் தீர்ப்புக்கள்
எங்களால்
திருத்தப்படல் வேண்டும்
அன்றேல்
கொழுத்தப்படல் வேண்டும்

குயிலை கொன்றுவிட்டு
கூட்டை ரசிக்கும்
நிலைமாற்ற

முடிவில்லாத
எங்கள் அழுகைக்கு
சற்று அழுத்தமாக
முற்றுப் புள்ளி வைப்போம்.

- நித்தியா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# உலக வலம்



* பிரதம மந்திரி சதீக் மாதியின் தலைமையிலான சூடான் அரசு இராணுவக் குழுவொன்றினால் பதவிகவிழ்க்கப்பட்டுள்ளது. சூடான் கடும் பஞ்சம், மற்றும் உள்நாட்டுப்போர் போன்ற காரணங்களால் ஏற்கனவே இரண்டு இலட்சத்து ஐம்பதினாயிரம் பேர் உயிர்களை இழந்துள்ளனர்.

* கிரேக்கத்தில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் திரு. பாப்பான்டெரு தலைமையிலான ஆளும் சோசலிஸ்டுக்கட்சி தோல்வியடைந்துள்ளது. இருப்பினும் எதிர்க்கட்சியான புதிய ஜனநாயகக் கட்சிக்கும் ஆட்சியமைப்பதற்கான அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. தற்போது வலதுசாரிக் கட்சியான புதிய ஜனநாயகக் கட்சி கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் துணையுடன் ஆட்சியமைக்க முன்வந்துள்ளது.

* ஸெயர் ஜனாதிபதியான மொபுட்டோவின் அமெரிக்க விஜயத்துக்கு எதிராக அமெரிக்க அரசியல் வட்டாரத்தில் கடும் எதிர்ப்புத் தோன்றியுள்ளது. அமெரிக்கஅரசின் கைக்கூலியான மொபுட்டோ ஒரு கொடிய சர்வாதிகாரியாகும். படுகொலைகள் சித்திரவதைகள், மில்லியன் கணக்கான மக்களின் பணக்கையாடல்கள் ஆகியவற்றுக்கு பொறுப்பான மொபுட்டோவை அமெரிக்காவின் புஷ் நிர்வாகம் வரவேற்றுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

* தென்னாபிரிக்க இனவாத அரசின் இனவெறிச் செயல்களுக்கு எதிராக ஈடுபட்ட கறுப்பின மக்கள் 26 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

* சோவியத் குடியரசான உஸ்பெகிஸ்தானில் தொடர்ந்து நிலைமைகள் சீர்குலைந்தே இருப்பதாக சோவியத் தலைவர் கோர்பச்சேவ் கூறியுள்ளார். இஸ்லாமியத் தீவிரவாதிகளே இந்நிலை ஏற்பட்டதற்கான காரணமானவர்கள் என்றும் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

* போலந்து தலைவர் ஜருசல்ஸ்கிக்கும் பிரெஞ்சு ஜனாதிபதி மித்திரோனுக்கும் இடையே ஏற்பட்ட சந்திப்பின் விளைவாக போலந்தின் கடன்பிரச்சனைகள் இலகுவாக்கப்பட்டுள்ளதுடன் போலந்துக்கு பிரான்ஸ் பல உதவிகளை வழங்கும் எனவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

* மேற்கு ஜேர்மனிக்கான சோவியத் தலைவர் கோர்பச்சேவின் விஜயம் பெரும் வெற்றியளித்திருப்பதாகக் கருதப்படுகிறது. படைவிலகல், ஆயுதக் குறைப்பு. , போன்ற கோர்பச்சேவின் கொள்கைகள் மேற்கு ஜேர்மன் மக்களால் பெருவிருப்புடன் வரவேற்கப்படுகின்றன.

* தென்னாபிரிக்காவுக்கு விஜயம் செய்த மேற்கு ஜேர்மனியின் தொழில் அமைச்சர் நோர்பேட்பளம் தென்னாபிரிக்க இனவாத ஜனாதிபதி போதாவினால் அவமானப்படுத்தப்பட்டுள்ளார். தென்னாபிரிக்க அரசின் இனவெறிச் செயல்களை மேற்கு ஜேர்மன் அமைச்சர் வரிசைப்படுத்தியபோது நாகரிகமில்லாதல் குறுக்கிட்ட போதா அவரை வாயை மூடுமாறு கூறியதுடன் ஒரு ஜேர்மன் நாசிக்கு இவைபற்றி பேசுவதற்கான அதிகாரமில்லை என்றும் கூறியுள்ளார்.

* தமது அரசியல் நடவடிக்கைகள் காரணமாக கைது செய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டிருந்த 5416 அரசியல் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கி விடுதலைசெய்வதென்ற தீர்மானத்தை ருஷிய பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.

* லிபியாவுக்கு எதிரான நீண்டகால ஆயுத விற்பனைத் தடையின் பின் தற்போது பிரான்ஸ் சில ஆயுதங்களையும், உதிரிப்பாகங்களையும் வழங்கப்போவதாக அறிவித்துள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

ஐரோப்பிய பாராளுமன்றத் தேர்தல் முடிவுகள்.

மேற்கு ஐரோப்பியாவின் 12 நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய பாராளுமன்றத்துக்கான தேர்தல்கள் முடிவடைந்துள்ளன. இத்தேர்தலில் பரவலாக எல்லா நாடுகளிலும் சோசலிசக் கட்சிக்கு குறிப்பிடத்தக்கவெற்றி கிடைத்துள்ளது. இதன் மூலம் கடந்தமுறை 166 ஆசனங்களை ஐரோப்பிய பாராளுமன்றத்தில்கொண்டிருந்த சோசலிஸ்டுகள் இம்முறை 180 ஆசனங்களை கைப்பற்றியுள்ளனர். கம்யூனிஸ்டுக் கட்சி 7 ஆசனங்களை இழந்து 41 ஆசனங்களைப் பெற்றுள்ளது. அதேசமயம் GREENS எனப் படும் பசுமைக் கட்சியினரே மிகக்குறிப்பிடத்தக்க வெற்றியை இம்முறை பெற்றவர்களாகும். கடந்த தேர்தலில் 20 ஆசனங்களைக் கொண்டிருந்த இவர்கள் இம்முறை39 ஆசனங்களைப் பெற்றுள்ளனர். வலதுசாரிக் கட்சிகள் முன்பிருந்ததைவிட இம்முறை குறைந்த ஆசனங்களையே பெற்றுள்ளனர்.

பிரித்தானியாவில் ஆளும் கொன்சர்வேட்டிவ் கட்சி 13 ஸ்தானங்களை இழந்து தோல்வியை சந்தித்துள்ளது. அதேசமயம் எதிர்க் கட்சியாகிய தொழிற்கட்சி முன்னரைவிட 13 மேலதிக ஆசனங்களைப் பெற்று குறிப்பிடத்தக்க வெற்றியைப் பெற்றுள்ளது. பிரித்தானியாவின் பசுமைக் கட்சியினர் 14.5%மான வாக்குகளைப் பெற்ற பொழுதும் அங்குள்ள தேர்தல் முறைக் குறைபாடுகளால் எந்த ஆசனத்தையும் பெறத் தவறிவிட்டனர்.

பிரான்ஸைப் பொறுத்தவரையில் வலதுசாரிக் கட்சிகளான UDF-RPR கூட்டணி ஆளும் சோசலிசக் கட்சியைவிட அதிக ஆசனங்களைப் பெற்றபோதும் கடந்தமுறையைவிட 8 ஆசனங்கள் குறையவே பெற்றுள்ளன. அதேசமயம் ஆளும் சோசலிஸ்டுகள் வலதுசாரிகளை முந்த முடியாது போயினும் 22 ஆசனங்களைப் பெற்று கடந்த தடவையை விட 2ஆசனங்கள் அதிகம்பெற்றுள்ளனர். ஆனால், பசுமைக் கட்சியினர் கடந்த பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்காதவர்கள். இவர்கள் இம்முறை 9 ஆசனங்களைப் பெற்றது இம்முறைத் தேர்தலின் வெற்றியாளர்களாக இவர்களையே கருத வைக்கிறது. பிரெஞ்சுக் கம்யூனிஸ்டுக் கட்சி சென்றமுறையைவிட 3 ஆசனங்களைஇழந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

7 ஆசனங்களைப் பெற்றுள்ளது. அதேவேளையில் இவைாதிகளான தீவிரவலதுசாரி தேசிய முன்னணி கடந்த தடவைபெற்ற 10 ஆசனங்களை இம்முறை பெற்றுள்ளது. இவிருந்து பிரிந்த மிதவாதக் குழுவும் 7 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

சோசலிஸ்டுகளும், பசுமைக் கட்சியினரும் இணைந்து பதவியேற்பார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## போலந்து தேர்தலில் சொலிடாரிஸ்நோசுக்கு வெற்றி

போலந்தில் கம்யூனிஸ்டு ஆட்சி ஏற்பட்ட பின்னர் முதல் தடவையாக நடைபெற்ற தேர்தல்களில் கம்யூனிஸ்டுக் கட்சி பெரும் தோல்வியை சந்தித்துள்ளது. இத் தேர்தல்களில் சொலிடாரிஸ்நோஸ் எனப்படும் தொழிலாளர் இயக்கம் பெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. இவ்வியக்கம் செனட்சபையில் 100 ஆசனங்களில் 99ஐயும், கீழ் சபையின் ஒதுக்கப்பட்ட 35%மான ஆசனங்கள் அனைத்தையும் வென்றுள்ளது. இவ்வியக்கத்தின் இந்த வெற்றி கம்யூனிஸ்டு கட்சியை அதிர்ச்சியடையச் செய்துள்ளது.

இதன்காரணமாக போலாந்தில் முதல்தடவையாக நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் கம்யூனிஸ்ட்டுக் கட்சி வேட்பாளராக தாம் நிற்கப்போவதில்லை என போலாந்து தலைவர் ஜருசலாஸ்கி அறிவித்துள்ளார். தாம் தற்போது போலாந்தில் ஏற்படுத்திவரும் அரசியல் சீர்திருத்தங்களைவிட கடந்தகாலத்தில் தம்முடைய ஆட்சிக் காலத்தில் பிரகடனப்படுத்தப்பட்ட இராணுவச் சட்டமே மக்கள் மனதில் இருக்கிறது என்றும் இதன் காரணமாகவே தாம் போட்டியிடுவதை தவிர்த்துச்சொல்வதாக அவர் கூறியுள்ளார்.

## ஈரானின் ஆன்மீகத் தலைவர் அயத்துல்லா கொமெய்னி மரணம்

ஈரானின் தனிப்பெரும் ஆன்மீக மதத் தலைவரான அயத்துல்லா கொமெய்னி நோய்வாய்ப்பட்டு சத்திர சிகிச்சையின் பின்னர் இரத்தப்பெருக்குக் காரணமாகமரணமடைந்தார். அயத்துல்லா கொமெய்னியின் கொள்கைகள் முரண்பாடுகள் நிறைந்ததாக இருந்தபோதும் ஈரான் மன்னர் ஷாவுக்கு எதிரான போராட்டங்களைமுடுக்கி ஷாவை விரட்டியடித்ததன் மூலம்மத்தியகிழக்கிலான அமெரிக்க ஆளுமைக்கு அதிரடி கொடுத்தது குறிப்பிடத்தக்கது. கொமெய்னியின் இஸ்லாமிய சாம்ராச்சிய விஸ்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

தரிப்புக் கொள்கை, ஈராக்குடனான நீண்ட காலப் போரில் ஏற்பட்ட அழிவுகள் ஆகியன ஈரானுக்கு பெரும் அரசியல் பொருளாதாரப் பாதிப்புக்களைக் கொடுத்தன. கொமெய்னியின் இறுதிச்சடங்குகளில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டனர்.

ஈரானின் புதிய தலைவராக ஜனாதிபதி அலி காமெனி அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும் விரைவில் ஈரானின் புதிய தலைவராக சபாநாயகரான ரஃப்சன்ஜானியேபதவி ஏற்பார் என் எதிர்பார்க்கப்படுகிறது.

அதேவேளையில் கொமெய்னியின் மரணத்துக்குப் பின்னர் சோவியத் யூனியனுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்ட ரஃப்சன்ஜானி சோவியத் தலைவர் கோர்பச்சேவின் புதிய கொள்கைகளால் ஈரானுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் புதிய உறவுகள் ஏற்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

<u>மனித இனத்துக்கு எதிரான குற்றச் செயல்களில் பல்கேரியா ஈடுபடுகிறது! துருக்கி குற்றச்சாட்டு</u>

பல்கேரியாவில் வாழும் துருக்கி இனத்தவர்கள் மீது பல்கேரிய அரசு மிக மோசமான அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விட்டு அவர்களை நாட்டைவிட்டு விரட்டியடித்துள்ளது. இது மனித குலத்துக்கு எதிரான குற்றச் செயலாகும். இவ்வாறு துருக்கியின் வெளிநாட்டமைச்சர் கூறியுள்ளார். பல்கேரியாவிலிருந்து துருக்கிக்கு விரட்டியடிக்கப்பட்டுள்ள சிறுபான்மை துருக்கி அகதிகளின் எண்ணிக்கை மூன்று இலட்சத்தை தாண்டிவிட்டது எனக் குறிப்பிட்ட அவர் பல்கேரிய அரசின் இந்தச் செயல் இனவெறிப்பிடித்தது மாத்திரமல்ல பாசிசத்தின் ஒரு வடிவமே என்றும் கூறியுள்ளார். இப்பிரச்சனையில் சோவியத் யூனியன் உடனடியாக தலையிட்டு நடவடிக்கை எடுப்பதன் மூலமே இதனை தீர்க்கமுடியும் என்றும் அவர் கோரியுள்ளார்.

* பாலஸ்தீன மக்களின் 'மக்கள் எழுச்சியை' அடக்கும் தனது தொடர் அடக்குமுறை அம்சங்களின் ஒரு பகுதியாக இஸ்ரேல் மேலும் மூன்று பாலஸ்தீன அமைப்புக்களை பயங்கரவாத அமைப்புகள் என்று கூறி தடைசெய்துள்ளது. மொத்தமாக 21பாலஸ்தீன அமைப்புக்கள் தற்போது இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன மண்ணில் தடைசெய்யப்பட்டுள்ளன.

www.tamilrangam.net

# இலங்கையில் இன்று...

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், தற்போதையபாராளுமன்ற உறுப்பினருமாகிய திரு.அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டணி முக்கியஸ்தர்களில் ஒருவருமாகிய திரு.வெற்றிவேல் யோகேஸ்வரனும் கடந்த 13ந்திகதி வியாழக்கிழமை இரவு கொழும்பில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளார்கள். கூட்டணித்தலைவர்களில் ஒருவராகிய முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு.மு.சிவசிதம்பரம் துப்பாக்கிக் காயங்களுடன் சிகிச்சைபெற்று வருகிறார். இக்கொலைகளுக்கு யாரும் இதுவரை உரிமைகோரவில்லை. ஆனால், இலண்டன் பி.பி.சி டைம்ஸ், போன்ற சர்வதேச செய்திஸ்தாபனங்கள் இக்கொலைகளுக்கு புலிகளே பொறுப்பு எனக் குற்றம்சாட்டியுள்ளன.

மேற்படி செய்திஸ்தாபனங்கள் இக்கொலைச்சம்பவமானது, கொழும்பில் கூட்டணியினருக்கும், புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தையொன்று நிகழ்ந்ததென்றும் அந்நேரத்திலேதான் இக்கொலைகள் நிகழ்ந்துள்ளது என்றும் இதன் பின் திரு.அமிர்தலிங்கத்தின் மெய்க்காப்பாளர் புலிகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நிகழ்த்தியதில் புலிகளில் மூன்று பேர் கொல்லப்பட்டனரெனவும் தெரிவிக்கின்றன. ஆயினும் இச்செய்திகளை புலிகளின் செய்தி நிறுவனங்கள் அனைத்தும் 'ஆதாரமற்றபொய்' என மறுத்துள்ளன.

* திருவாளர்கள் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், சிவசிதம்பரம் ஆகியோர் மீது கொலையாளிகள் குழு நடத்திய கோழைத்தனமான, மிருகத்தனமான தாக்குதலை ஒருமனதாக கண்டிப்பதாகக் கூறும் பாராளுமன்ற எதிர்க்கட்சிகள் குழு, இந்தாக்குதலின் சூழ்நிலை குறித்து முழுமையான பாரபட்சமற்ற விசா

www.tamilrangam.net

ரணை நடத்தவேண்டுமென்றும் கோரியிருக்கிறது. இந்த அறிக்கையை சிறீலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய சோசலிச முன்னணி, ஈ.பி.ஆர்.எல்.எவ், மக்கள் ஐக்கிய விடுதலை முன்னணி ஆகியவை கூட்டாக வெளியிட்டுள்ளன.

* தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் ( PLOT ) தலைவர் திரு. உமாமகேஸ்வரன் கடந்த 16ந் திகதி ஞாயிறன்று கொழும்பில் வைத்து இனந்தெரியாதநபர்களினால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

* கடந்த 15-2.89ல் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் வடகிழக்குப் பகுதிகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஈரோசின் 13 அங்கத்தவர்களும் இதுவரைசில கோரிக்கைகளை முன்வைத்து பாராளுமன்றத்தைப் பகிஸ்கரித்து வந்தமை யாவரும் அறிந்ததே. எனினும் இக்கோரிக்கைகள் முழுமையாக நிறைவேற்றப்படாதபொழுதும் எதிர்வரும் 21.7.89இல் இவர்கள் பாராளுமன்றம் செல்லவிருப்பதாக ஈரோசின் முக்கிய உறுப்பினர் திரு. சங்கர் அறிவித்துள்ளார்.

* யூ.என்.பி இனவாத அரசால் 1983ம் ஆண்டுகொண்டுவரப்பட்டு 1989ம் ஆண்டு ஜனவரிவரை நீடிக்கப்பட்ட அவசரகாலச் சட்டமானது நீக்கப்பட்ட ஐந்து மாத காலத்திற்குள்ளாகவே மீண்டும் நாடு முழுவதும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த ஐந்து வருடகாலத்தில் அவசரகால நிலையைப் பயன்படுத்திதான் தோன்றித்தனமாக அதிகாரத் துஸ்பிரயோகம்செய்த அரசின் செயல்களைச் சுட்டிக்காட்டிய திரு. அநுரா பண்டாரநாயக்கா "மக்களின் உயிரோடு தொடர்ந்தும் விளையாடக்கூடாது எனவும், அப்படி விளையாடினால் நாமும் இல்லை பாராளுமன்றமும் இல்லை. என்று கூறினார்.

* தென்னிலங்கையில் அரசும், ஜே.வி.பி.யினரும் மேற்கொண்டுவரும் தீவிர இந்திய எதிர்ப்பு பிரச்சாரம் உச்சநிலமை அடைந்துள்ளது. இதன் எதிரொலியாக தென்னிலங்கையிலுள்ள அனைத்து திரையரங்குகளிலும்இந்

www.tamilrangam.net

தியத் திரைப்படம் தடைசெய்யப்பட்டுள்ளதோடு, இந்தியப் பொருட்கள் விற்பனை செய்தல், இந்தியவியாபார ஸ்தாபனங்கள் திறத்தல் என்பவை தடை செய்யப்பட்டு இவற்றை மீறுபவர்கள் படுகொலைக்குமுள்ளாகின்றனர்.

அதேவேளை வடக்கிலும் கிழக்கிலுமாக சில சிலஇடங்களில் இந்தியப் படையினர் வெளியேற வேண்டுமென்றஅரச உத்தரவை எதிர்த்து மக்கள் ஊர்வலங்களை நடத்தியுள்ளனர். ஊர்வலத்தில் 'மாகாண சபைக்கு-அதிகாரங்களைக் கொடு', 'அமைதி ஏற்படும்வரை இந்தியப் படையையே வெளியேறாதே' போன்ற சுலோகங்களை மக்கள் ஏந்தியும் சுலோகித்தும் சென்றுள்ளனர்.

* இந்திய இராணுவத்தினரைத் திருப்பியழைக்குமாறு ஜனாதிபதி பிரேமதாஸ விடுத்த கோரிக்கைக்கு வட-கிழக்கு மகாண சபைக்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்பட்ட பின்பே வாபஸ் பெறப்படும் என இந்தியப் பிரதமர் திரு.ராஜீவ் காந்தி பதிலளித்துள்ளார்.

* வடக்கு கிழக்கில் உள்ள பாடசாலை மாணவர்கள்ஆயுதப் பயிற்சிக்காக பலவந்தமாக கடத்திச் செல்லப்படுகின்றனர். பெற்றோர்கள் இதனால் பெரும் பீதியும் கவலையும் அடைந்துள்ளனர். இதுவரையில் ஏறத்தாள 4000 மாணவர்கள் வரையில் இவ்வாறு கடத்தப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

* அரசு- புலிகள் பேச்சுவார்த்தையின் இரண்டாம் கட்டம் ஆரம்பமாகியுள்ளது. பேச்சுவார்த்தையில் "புலிகள் தமிழீழக் கோரிக்கையை முன்வைக்கவில்லை". எனக் குறிப்பிட்ட அமைச்சர் ஹமீது, புலிகளின் முடிவினை அரசாங்கம் வரவேற்பதாகவும், இனிவருங்காலத்தில் அரசாங்கம் புலிகளுக்கெதிரான எல்லாப் பகைமை நடவடிக்கைகளையும் முடிவுக்குக் கொண்டுவரும் எனவும் தெரிவித்திருப்பதோடு, இலங்கையிலுள்ள எல்லாச் சமூகங்களும், குழுக்களும் தமக்குள்ள எந்தப் பிரச்சினையையும் வெளியோர் தலையீடின்றி ஆலோசனை, இணக்கம், புரிந்துணர்வு ஆகியவற்றின் மூலம் தீர்த்துக்கொள்வதெனவும் புலிகளும்- அரசாங்கமும் இணக்கத்துக்கு வந்துள்ளனவென குறிப்பிட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

# உரைகல்; போகின்ற போக்கில்......

-யாழ்ப்பாணன்

ஆசிரியர் :- எங்கட ஆக்கள் வலு கெட்டிக்காறர் என்பதற்கு ஒரு உதாரணம் கூறு.

மாணவன் :- அரசியல் தஞ்சங்கேட்டு அகதிகளாக இருந்து கொண்டே, லட்சாதிபதிகளான தமிழ்ச் சினிமா நடிகர்களையும், பாடகர்களையும் இந்தியாவிலிருந்து வருவித்துப் பணம் கொடுத்துப் பணம் பண்ணுதல்.

•••



பேராசிரியர் :- அறிவு வளர ஒரு வழி கூறு.

கலைஞர் :- ஒழுங்காகத் தமிழ்ச் சினிமாவைப் பார்க்க வேண்டும்.

•••

ஒருவர் :- பாரீஸ் தியேட்டர்களிலும் வாரம் தவறாமல் தமிழ்ச் சினிமாப் படங்கள்பார்க்கும் பெரும் பாக்கியம் கிடைத்திருக்கிறது.

மற்றவர் :- சபாஷ், அப்படியானால் வலு கெதியாகப் பிரான்சிலும் தமிழ் ஈழம் காண்பாம்.

•••



பண்டிதர் :- சிறந்த முட்டாள்கள் யார்?
வியாபாரி :- தமிழ்ச் சினிமாப் படம் பார்க்காதவர்கள்.

•••

சுந்தர் :- தமிழ்ச் சினிமாப் படங்கள் பார்ப்பதால் வரும் நன்மை என்ன?

கந்தர் :- சிந்தனை விரிவடையும். தேசப்பற்று ஓங்கும். காமப் பித்துத் தலைக் கேறு மேதைகள் உருவாக்கப்படுவார்கள்.

•••

www.tamilrangam.net

செய்தி :- 'சாத்தானின் வேதம்' என்ற நாவல் எழுதிய ருஷ்டியைக் கொலை செய்யுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

வாசகன் :- ஆகா... எழுத்தாளன் சுதந்திரமானவன் என்கிற ஜனநாயக வாதம் ஈரானில் தான் தலையெடுத்திருக்கிறது.



•••

ஒருவர் :- பிரான்சில் உள்ள இந்தியன் ஹை கமிஷனர் கந்தோருக்கு விசா எடுக்கப்- போக, அங்கே விசா தராமல் - தேவையில்லாத பத்திரங்களைக் கேட்டு அலைக்கழிச்சுக் கொண்டிருக்கிறம்.

மற்றவர் :- உனக்கு விசயம் தெரியேல்ல. அவேக்குத் தேவையான சம்திங்கைக் குடுத்தால் உடனவிசா தருவினம்.

•••

நிருபர் :- ஈழத்துப் பிரச்சனையில் கருத்துச்சுதந்திரம் வழங்கிய இயக்கம் எது?

இயக்கவாதி :- துப்பாக்கிக் குண்டு விளையாடும் பந்தாகியதால் சுதந்திரம் மட்டுமல்ல, ஜனநாயகப் பண்பும் ஈழத்தில்தான்உண்டு.

•••

கலைஞர் :- அண்ணை. அடிதடிச் சண்டைக் காட்சியும் கட்டிப்புரளும் காதல் கட்டமும் இந்தப் படத்தில் எத்தனை இடத்தில் வருகுது?

கடைக்காறர் :- படம் முழுக்க அதுதான்.

கலைஞர் :- அப்படியென்டா அதில ஒரு பத்துக் கசட் தாங்கோ.

•••

பிரஜை :- இலங்கைப் பிரச்சனை தீர மார்க்கம் என்ன?

உபதேசியார் :- செப தபம் செய்யவேண்டும்.



www.tamilrangam.net

# பிரெஞ்சுப் புரட்சிக்கு வயது இருநூறு

-மோகன்-

1789 – உலக வரலாற்றின் புதிய அத்தியாயத்தை எழுதிய ஆண்டு. அடக்குமுறையின் அனைத்து அம்சங்களையும் கொண்ட முடியாட்சியின் முடிவுக்கு முகவுரை எழுதப்பட்ட ஆண்டு. பசிக்குப் பாண் இல்லை என்று பரிதவித்த மக்களின் துன்பத்தைப்புரியாமல் 'பாண் இல்லை'என்றால் கேக்கைச் சாப்பிடட்டும்' என்ற திமிர்த்தனம் தொனிக்கக் கூறிய பிரெஞ்சு அரசபரம்பரைக்கு அஸ்தமனம் நிகழ்ந்த காலம்.

அசைக்கவே முடியாது என்று மார்தட்டிய அரசவம்சம் பிரான்சிலேஆவேசம் கொண்டு கிளர்ந்தெழுந்த மக்கள் கூட்டத்தால் தகர்த்தெறியப்பட்டது. உலக மண்ணில் முதல்தடவையாக புரட்சியின் விதைகள் ஊன்றப்பட்டது. மன்னர் ஆட்சிமுறை தகர்த்தெறியப்பட்டு மக்களாட்சிக்கான வழி திறக்கப்பட்டது.

ஆம், பிரெஞ்சுப் புரட்சி நடந்து 200 வருடங்கள் ஆகிவிட்டது. உலகில் புரட்சிக்கான முதல் விதை ஊன்றப்பட்டு 200 வருடங்கள் ஆகிவிட்டது. சுதந்திரம்-சமத்துவம்-சகோதரத்துவம் இந்த மூன்று இலட்சியங்களுடன் தனது ஆட்சியைதொடங்கிய பிரெஞ்சுப் புரட்சிக்கு இன்று வயது 200.

இது ஒரு வரலாறு. இந்த வரலாற்றை அடிமைத்தளையில் சிக்கித் தவிக்கும் நாம் அறிய வேண்டியது மிக அவசியம். இவ்வரலாற்றை அறிவதற்கான சகலவாய்ப்புக்களையும் பிரெஞ்சுப் புரட்சியின் 200வது வருடக் கொண்டாட்டங்கள் தருகின்றன. புரட்சியின் வரலாற்றைச் சித்தரிக்கும் பொருட்காட்சிகள் சிறப்பு மிகு நாடகங்கள் அணிவகுப்புக்கள், கலை நிகழ்வுகள் என்றெல்லாம் பாரிஸ் நகரமே விழாக் கோலம் பூணுகிறது.

ஏறத்தாழ 30க்கும் மேற்பட்ட பல்வேறு நாடுகளின் அதிபர்கள் பல நூற்றுக்கணக்கான விசேட விருந்தினர்கள் இவர்கள் தவிர இலட்சக்கணக்கான மக்கள் கலந்துகொள்ளும் இவ் விழாக்களுக்காக செலவழிக்கப்பட்ட பணம் '300 மில்லியன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

டொலர்களுக்கு மேல் எனக் கணக்கிடப்படுகிறது.

பிரெஞ்சுப் புரட்சி நடந்து 200 ஆண்டுகளாகியும் புரட்சி குறித்த சர்ச்சைகள் இன்னும் முடியவில்லை. புரட்சி சரியா, பிழையா என்பது பற்றியல்ல, புரட்சியின் போது நடந்த சம்பவங்கள் குறித்த சர்ச்சைகள் தற்போதும் தொடர்கின்றன. இது போலவே இப்புரட்சியின் 200வது ஆண்டு கொண்டாட்டங்கள் தொடர்பாகவும்நாட்டில் பலத்த சர்ச்சைகள் மூண்டுள்ளன.

சோசலிச அரசும் ஜனாதிபதி மித்திரோனும் புரட்சியின் முக்கியத்துவம் கருதி இவ் விழாவைக் கொண்டாடவில்லை. தமது பெயர்களை வரலாற்றில் எழுதுவதற்காகவே இவ்விழாக்களைக் கொண்டாடுகிறார்கள் என்ற வலதுசாரி எதிர்க்கட்சிகளின் - வாதங்கள் வலுவற்றவையாகவே இருக்கின்றன.

ஆனால் கம்யூனிஸ்டுக் கட்சியும், தீவிரவாதக் கம்யூனிஸ்ட் கட்சிகளும், இதர இடதுசாரி அமைப்புகளும் ..... 'புரட்சி' நிகழ்ந்தது ஏழை மக்களுக்காக, - புரட்சி நிகழ்த்தப்பட்டது ஏழை தொழிலாள வர்க்கத்தால். எனவே இக் கொண்டாட்டங்களில் அவர்களுக்கே முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டுமேயொழிய செல்வந்தநாடுகளின் தலைவர்களுக்கும், மேட்டுக் குடி மக்களுக்குமல்ல" என்று கூறுகின்றவாதம் அலட்சியப்படுத்தக்கூடியது அல்ல.

புரட்சியின் அர்த்தத்தை சோசலிச அரசு விற்றுவிட்டது எனக்கூறும் இந்தஇடதுசாரிகள் நடத்திய எதிர்ப்பு ஊர்வலத்தில் இலட்சக்கணக்கான மக்கள் பங்குபற்றியதுடன் மூன்றாவது உலக நாடுகள் தொடர்பான கோஷங்கள் தேசவிடுதலை தொடர்பான கோஷங்கள் ஆகியன இவ்வூர்வலத்தில் "சுலோகிக்கப்பட்டதும்" குறிப்பிடத்தக்கது. அத்துடன் புரட்சியின் சிறப்பம்சமான சிறையுடைப்பு நிகழ்ந்த பஸ்ரிலில் ஏராளமான மக்கள் கலந்து கொண்ட எதிர்ப்பு இசைநிகழ்ச்சியும் குறிப்பிடத்தக்கது.

அதேசமயம் புரட்சியின் 200வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் ஜனாதிபதி மித்திரோன் மூன்றாவது உலகநாடுகளுக்கு பாரிய சுமையாயிருந்த அவர்கள் திருப்பியளிக்க வேண்டிய கடன்தொகைகளை இரத்துச் செய்ததும், செல்வந்த நாடுகள் பின்தங்கிய நாடுகளுக்கு உதவிவழங்க வேண்டும் என்று வற்புறுத்தி இதர நாடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

களை தீர்மானத்துக்கு சம்மதிக்க வைத்திருப்பதும் அலட்சியப்படுத்தக் கூடியது அல்ல

எது எப்படியிருந்த போதிலும் சுதந்திரம்—சமத்துவம்— சகோதரத்துவம் என்னும் உயரிய இலக்குகளை உலகுக்கு காட்டிய பிரெஞ்சுப் புரட்சி மகத்தானது. மனிதனின் உரிமைகளை உலகுக்குப் பிரகடனம் செய்த இப்புரட்சியின் உயரிய குறும்சங்களை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

..........................................................................

அராஜகவாதிகளைப் போலல்லாமல், மார்க்சியர்கள் சீர்திருத்தங்களுக்கான போராட்டத்தை அங்கீகரிக்கின்றனர்......எனினும், அதே நேரத்தில், சீர்திருத்தங்களைப் பெறுதலை மட்டுமே பாட்டாளி வர்க்கத்தின் நோக்கங்களாகவும் செயல்முறைகளாகவும் குறுக்கிக் கொண்டுள்ள—நேரடியாக அல்லது மறைமுகமாக இதில் ஈடுபடும்— சீர்திருத்தவாதிகளை எதிர்த்து மிகக் கடும் போராட்டத்தை மார்க்சியர்கள் மேற்கொள்ள வேண்டும்.

(திருத்தல் வாதம் எதிர்ப்போம்; மார்க்சியம் காப்போம்,

—லெனின் ப. 75).

மார்க்சியர்கள், சீர்திருத்தங்களைப் பெறுவதிலும் பயன்படுத்துவதிலும் உள்ள எந்தவொரு சாத்தியத்தையும் இழந்துவிடாமல் கடுமையாக உழைக்கின்றனர். அவற்றைக் கண்டனம் செய்யாது, ஆதரிக்கின்றனர். அவற்றில் ஏற்படும் ஒவ்வொரு விளைவையும் சீர்திருத்த வாதத்துக்கு அப்பாற்பட்டதாக வளர்த்தெடுப்பதில் பிரச்சாரம், கிளர்ச்சி மக்கள் திரள் பொருளாதாரப் போராட்டம் இன்னும் இவை போன்றவற்றில் உடல் வருந்திக் கடுமையாக உழைக்கின்றனர்.

— லெனின்.

www.tamilrangam.net



# பிரெஞ்சுப் புரட்சி : இருநூறாமாண்டு

## 1789 - 1989

"அந்த விடியலில் நாம் வாழ்ந்திருந்தோம் என்பதே பெருமகிழ்ச்சி" - பிரெஞ்சுக் கொடுங்கோல் முடியரசின் அரணாக நின்ற பாஸ்டி சிறைக்கூடம் மக்களால் தகர்த்தெறியப் பட்டதைக் கேட்டவுடன் ஆங்கிலக் கவிஞன் வோர்ட்ஸ்வொர்த் குதூகலத்தில் துள்ளினான்.

படைகளை அனுப்பாமலேயே ஐரோப்பாவை பிரான்ஸ் ஆக்கிரமித்துவிட்டது! புரட்சியின் சிந்தனை ஐரோப்பாவென்ன உலகெங்கிலும் தீ போலப் பரவியது. பிரெஞ்சுப் புரட்சியின் மைந்தர்களே அதைத் தங்கள் நாட்டின் உள்விவகாரமாகக் கருதவில்லை. புரட்சி மனித குலத்தின் தேவையெனக் கருதினார்கள்.

"உலகம் தன் தலையின் மீது நின்ற காலம அது" என்றார் ஹெகல். மனிதனது மூளையும் (தலையும்) அதன் சிந்தனையால் வந்த டையப்பட்ட கோட்பாடுகளும் தாங்கள் தான் மனிதனின் எல்லா உறவுகளுக்கும் செயல்களுக்கும் அடிப்படை என்று அறை கூவின. மதம், விஞ்ஞானம், சமுதாயம், அரசியல் நிறுவனங்கள் - எதுவாக இருந்தாலும் சரி; அவை ஈவு இரக்கமின்றி விமர்சிக்கப் பட்டன. அவை ஒவ்வொன்றும் அறிவின் சன்னதியில் தங்கள் யோக்கியதையை நிரூபிக்க வேண்டும். இல்லையேல் ஒழிந்து போகவேண்டும். ஆம்! உலகம் உண்மையிலேயே தலை மேல் தான் நின்றது.

வாழ்வதற்குத் தகுதியிழந்த முடியாட்சியும், மத ஆதிக்கமும் அவற்றின் அதிகார பீடங்களிலிருந்து கேலிக் குரல்களின் நடுவே இழுத்து வீசியெறியப்பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

''மக்கள் இங்கே புல்லைத் தின்று உயிர் வாழ்கிறார்கள். செத்துக் கொண்டிருக்கும் நோயாளிகளுக்கும், பிச்சைக்காரர்களுக்கும் மன்னராயிருப்பவரை 'மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தி' என்று எப்படி அழைக்கமுடியும்?'

1725 இல் 15ம் லூயி மன்னனின் பிரான்சைப் பற்றி ஒரு கிறித்தவ மதகுரு கொடுத்த நற்சான்றிதழ் தான் இது. அவனது மகன் 16ம் லூயி மன்னனின் ஆட்சியைப் பற்றியோ கேட்கவேண்டாம்.

''இரண்டு கழுதைகளை அவன் ஓட்டிச் சென்றான்
ஒரு கழுதையின் முதுகில் ஓட்ஸ் தானிய மூட்டை
இன்னொரு கழுதையின் முதுகிலோ
உப்பு வரி ரசீது கட்டுகள்''

என்று விவசாயிகளின் அவலநிலையைப் பாடினான் ஒரு கவிஞன். பண்ணைகளும், குறுநில மன்னர்களும், கிறித்தவ மடாலயங்களும் நாட்டைப் பங்குபோட்டுக் கொண்டிருந்தன. விவசாயி ஒண்டவந்தவனைப் போல துண்டு நிலத்தில் உயிரைவிட்டுக் கொண்டிருந்தான். காடுகளும் புல்வெளிகளும் மேட்டுக்குடியினரின் பரம்பரைச் சொத்தாக இருந்தது. வன விலங்குகளோ மேட்டுக்குடி இளவல்களின் வேட்டை விளையாட்டுக்காக பாதுகாக்கப்பட்டன. ஆம்! கண்ணைப் போல் போற்றி வளர்த்த தனது பயிரை குழிமுயல்கள் நாசம் செய்தாலும் அவற்றைக் கொல்லும் விவசாயி குற்றவாளியானான்.



ரோபஸ்பியே (Robespierre): தனது 31 வயதிலேயே அசெம்பிளி உறுப்பினரான இவர் 'ரூஸோ'வின் தத்துவத்தைப் பின்பற்றுபவர். ஜாகோபின் கழக முன்னோடி.

மாரட் (Marat): 'மனிதனும் அடிமைச் சங்கிலியும்' எனும் நூலை எழுதியவர். பாரிஸ் புரட்சிக் குழுவின் உறுப்பினர். மன்னனின் தலையைச் சீவவேண்டும் என முதல் குரல் கொடுத்தவர். முடியாட்சியின் கைக்கூலிப் பெண் ஒருத்தியால் குளியலறையில் கொல்லப்பட்டார். 'மக்களுக்காக மடிந்த தியாகி' என்பதால் ஆயிரக்கணக்கான தாய்மார்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இவர் பெயரைச் சூட்டினர். ஓவியம், நாடகம், கதை என்று பல வடிவங்களில் மாரட்டின் புகழ் பிரான்சில் நிலை பெற்றுவிட்டது.




மன்னனின்வரம்பில்லாத அதிகாரத்திற்கு எதிராகவும், மத நிறுவனத்திற்கு எதிராகவும் வால்டேர் எழுப்பிய போர்க்குரல் தனது படையணியில் ஆயிரக்கணக்கானவர்களைத் திரட்டிக் கொண்டிருந்தது. தீத்ரோவின் நாத்திகப் பிரச்சாரமும் பொருள் முதல் வாதக் கருத்தும் அறிவு ஜீவிகளையும், மதக் கொடுங்கோன்மைக்கு ஆளாகியிருந்த மக்களையும் தன்பால் வெகுவேகமாக ஈர்த்தது.

''வன்முறையைப் பயன்படுத்த முடியும் வரையில்தான் கொடுங்கோலன் எசமானனாக இருக்க முடியும். அவன் வெளியே துரத்தப்பட்டால் அவன் (தனக்கெதிராக) வன்முறை பயன்படுத்தப்பட்டது குறித்துப் புகார் செய்ய முடியாது... வன்முறை மட்டுமே அவனை அதிகாரத்தில் வைத்திருந்தது. வன்முறை மட்டுமே அவனை வீழ்த்துகிறது'' என்று ரூசோ வின் விரல் செல்லவேண்டிய பாதையைக் காட்டிக் கொண்டிருந்தது.

www.tamilrangam.net

**1789** – பிரெஞ்சுப் பொருளாதாரம் நிலை குலைந்து கிடந்தது. 'தேசம் திவாலாகி விட்டது. உடனடியாக சிக்கன நடவடிக்கைகள் மூலம் செலவுகளைக் குறைக்க வேண்டும்' என்று ஆலோசனை சொன்னார்கள் மந்திரிகள்.

மன்னனை முந்திக்கொண்டு கேட்டாள் மகாராணி "தேசம்தானே திவாலானது, நமக்கென்ன?" நாடு தழுவிய பஞ்சத்தால் நொடித்துப் போயிருந்த விவசாயிகள் மீது மேலும் வரிச்சுமையைக் கூட்ட முடிவு செய்யப்பட்டது. மன்னனின் கேளிக்கைக்காகவும், மகாராணியின் பீதாம்பரத்திற்காகவும், இளவல்களின் மதுவிற்காகவும், பாதிரிகளின் விருந்துக்காகவும் மக்கள் மேலும் சில துளி ரத்தத்தைத் தியாகம் செய்யுமாறு கோரப்பட்டனர். மக்களும் ஒப்புக் கொண்டனர் தியாகம் செய்வதற்கு. தங்கள் உதிரத்தை அல்ல; மன்னராட்சியை!

மன்னர்களாலும், மத குருமார்களாலும் பன்னூறாண்டு காலமாக கறைப்படுத்தப்பட்ட தங்கள் இனிய தேசத்தை, அந்த மேட்டுக்குடிப் பன்றிகளின் ' ரத்தத்தைக் கொண்டே கழுவினார்கள் பிரெஞ்சு மக்கள்.

1789 முதல் 1794 ஆம் ஆண்டு வரையிலான காலம் முழுவதும் துப்பாக்கி வேட்டுச் சத்தமே மக்களின் இசையாக இருந்தது.



வால்டேர் (1694 - 1778): பிரெஞ்சு எழுத்தாளர்; நாடகாசிரியர். முடியாட்சியை எதிர்த்து எழுதியதற்காகச் சிறைசென்றவர்; நாடு கடத்தப்பட்டவர். மதம் நிறுவனமாக இருப்பதையும், கத்தோலிக்க மதக் கொடுங்கோன்மையையும் சாகும் வரை எதிர்த்தார். எனவே இவரது உடலைப் புதைக்கக்கூட இடுகாட்டில் இடம்தர முடியாதென்று கத்தோலிக்க மடாலயம் மறுத்துவிட்டது



ரூசோ (1712 - 1778): பிரெஞ்சு தத்துவவியலாளர்; அறிவொளி இயக்கவாதி. 'ஆரம்பத்தில் சமமாக இருந்த மக்கள் நாகரீகம் வளர்ந்தபின் ஏற்றத் தாழ்வுகளுக்கு ஆளாயினர். இந்த ஏற்றத்தாழ்வு விவேகமான அரசு ஒன்றின் மூலம் நீக்கப்பட வேண்டும்' என்பது இவரது தத்துவம்.

ஆம்! புரட்சி வெடித்தது - திடீரென்று அல்ல; எதிர்பாராமல் அல்ல; வால்டேரும், தீத்ரோவும், ரூசோவும் தோற்றுவித்த அறிவொளி இயக்கம் திரியில் வைத்த தீயாகப் பிடித்துப் புகைந்து, எரிந்து பின்னர்தான் வெடித்தது. 'பாஸ்டீ' சிறை தகர்க்கப்பட்ட போதுதான் அந்த வெடிச் சத்தத்தை உலகம் கேட்டது.

"சகோதரர்களே அணிதிரளுங்கள்! சுதந்திரம் உங்களை அழைக்கிறது!" என்று முழங்கினார்கள் புரட்சியாளர்கள். மன்னனின் வாளையும், மதகுருவின் சிலுவையையும் நெற்றியில் கட்டிக் கொண்டிருந்த தேசம் இப்போது 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்ற தங்களின் லட்சியம் பொறித்த பதாகையுடன் முன்னேறிச் சென்றது.

பிரிட்டிஷ்காரர்கள் தங்கள் மன்னனையும், மதத்தையும், சட்டத்தையும், அரசையும், பிரபுக்கள் சபையையும் குறித்து பெருமை பாராட்டிக் கொண்டிருந்தார்கள். ஆனால் பிரெஞ்சு மக்களோ தங்கள் அரசாங்கத்தை எதிர்த்தார்கள்; பாதிரிகளை இகழ்ந்தார்கள்; பிரபுக் குலத்தை வெறுத்தார்கள்; சட்டங்களுக்கு எதிராகக் கலகம் செய்தார்கள். பிரெஞ்சுப் புரட்சி, இலக்கண சுத்தமாக, துப்புரவாக நிலப்பிரபுத்துவத்தை துடைத்தெறிந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

அடக்கி வைக்கப்பட்டிருந்த கருத்துச் சுதந்திரம் பீறிட்டுக் கிளம்பியது. முடியாட்சியை எதிர்த்த போராட்டத்தில் உழைப்பாளி மக்களுடன் தோளோடு தோள் நின்று போரிட்டு மக்களுக்காகவே தன் உயிரையும் கொடுத்தான் மாரட் என்ற இளம் பத்திரிகையாளன். "நான் ஒரு குடியரசுவாதி; மன்னர்களை எதிர்த்து எழுதுபவன். நான் ஒரு குடியரசுவாதி; என் தாயின் கருப்பை யிலிருக்கும்போதே நான் ஒரு குடியரசுவாதி" என்று முழங்கினான் லாவிகோம்டே என்ற பத்திரிக்கையாளன். மன்னன் அதிகாரத்திலிருந்து முற்றிலும் தூக்கியெறியப்படாத போதே தன் உயிரைத் தூசாக மதித்து "மன்னர்களின் கிரிமினல் குற்றங்கள் - க்ளோவி முதல் பதினாறாம் லூயி வரை" என்று கட்டுரை எழுதினான். "பத்திரிகையாளனை தண்டிப்பதற்கு எங்கே அரசுக்கு அதிகாரம் இருக்கிறதோ, அங்கே கொடும் குற்றமிழைத்த அதிகாரிகளைப் பற்றிக்கூட ஒரு வார்த்தை எழுத முடியாது" என்று முழங்கினான் ரோபஸ்பியே என்ற புரட்சியாளன். ஆனால் எதிரிகள் விஷயத்தில் புரட்சியாளர்கள் எச்சரிக்கையாகவே இருந்தனர். மன்னராட்சிக்கு ஆதரவான துதிபாடிகள் வாய் திறந்தால் தூக்கிலேற்றப்படுவர் என்று எச்சரித்தனர்.

அச்சத்திலும் அடிமைத்தனத்திலும் ஆழ்த்தப்பட்டிருந்த மக்களை நோக்கி அறைகூவினான் ஒரு எழுத்தாளன். "மாபெரும் மனிதர்கள் எனப்படுவோர் அப்படித் தோன்றக் காரணம் என்ன தெரியுமா? நாம் மண்டியிட்டிருப்பதுதான். எழுந்து நில்லுங்கள்" என்று ஆணையிட்டான். விவசாயிகள் எழுந்து நின்றனர்.

இளவரசர்கள், பிரபுக்கள், மத குருமார்களின் மாளிகைகளில் ஆயுதம் தரித்த விவசாயிகள் புகுந்தனர். தங்களுடைய பாஸ்டீ சிறைகளை அவர்கள் தகர்த்தெறிந்தனர். "பிரபுக்குலத்தை அடக்குவது நமது நோக்கமல்ல; அதை ஒழிப்பதுதான்" என்று பிரகடனம் செய்தனர். காடுகளையும், குளங்களையும் ஆறுகளையும் பண்ணைகளின் ஆதிக்கத்தில் வைத்திருக்கும் அனைத்து சட்டங்களையும் கொளுத்துங்கள்! மனிதனையும் முயலையும் ஒன்றாகக் கருதும் அறிவுக்குப் புறம்பான, மனித சமுதாயத்துக்கே இழுக்கான அனைத்து சட்டங்களையும் கொளுத்துங்கள்" என்ற குரல் எழுந்தது "பிரபுக்குலத்

தீத்ரோ (1713 - 84): பிரெஞ்சு பொருள்முதல்வாத தத்துவவியலாளர், எழுத்தாளர்.





டான்டன் (Danton): 1787 இல் இவர் மன்னரது ஆலோசனைக் கவுன்சில் உறுப்பினர். 1790 இல் 'மாரட்' கைது செய்யப்பட்டதை எதிர்த்து ஜாகோபின் கழகத்தில் இணைந்தார். புரட்சியின் சிறந்த ராஜதந்திரி எனப் போற்றப்படுபவர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

தோரின் நிலப்பட்டாக்கள் அனைத்தும் மூன்று மாதத்திற்குள் சம்பந்தப்பட்ட பதிவாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அவை நகர கவுன்சில் மற்றும் மக்களின் முன்னிலையில் கொளுத்தப்பட வேண்டும்'' என்று ஆணை பிறப்பிக்கப்பட்டது. பறிமுதல் செய்யப்பட்ட நிலங்களுக்கு நட்டஈடு கிடையாது என்பது மட்டுமல்ல; மீண்டும் அவற்றை விலைகொடுத்து வாங்கும் உரிமையும் பிரபுக்களுக்கும் மதபீடங்களுக்கும் கிடையாது என்று அறிவிக்கப்பட்டது. விவசாயிகள் புரட்சிக்கு இலக்கணம் படைக்கப்பட்டது.

சொத்துக்களை இழந்த கத்தோலிக்க மதபீடம் பொறுமிக் கொண்டிருந்தது. போப் புரட்சியைக் கண்டித்து அறிக்கை விட்டார். ஆனால் கண்ட னக் குரல் எழுப்புவதற்காகப் பாதிரிகள் வாய் திறப்பதற்குள் அடுத்த அடி விழுந்தது.

பிராட்டஸ்டென்டுகள், யூதர்கள் மற்றும் கறுப்பின மக்கள் மீது கத்தோலிக்க மடாலயம் செலுத்திவந்த ஆதிக்கம் ஒழிக்கப்பட்டது. கிறித்தவர்களிடம் ஊட்டப்பட்டிருந்த யூத எதிர்ப்பு வெறியை எதிர்த்து கிரெகோ என்பவர் பேசினார்: ''உங்கள் வாரிசுகளுக்கு நீங்கள் விட்டுச்செல்லும் சொத்தில் யூத எதிர்ப்பு வெறியும் இடம்பெறப் போகிறதா? யூதர்களின் ஊழல்களையும், குற்றங்களையும் பற்றி பேசுபவர்களே கேளுங்கள்! அவர்களது ஊழல்களுக்கும் குற்றங்களுக்கும் தோற்றுவாய் நீங்கள்தான் - கிறித்தவர்களாகிய நீங்கள் தான்! உங்கள் பாவத்துக்கும், உங்கள் முப்பாட்டன்களின் பாவங்களுக்கும் கழுவாய் தேடுங்கள்! அவர்களை நல்லொழுக்க சீலர்களாக மாற்றுவதற்கும் நீங்களே முயல்வதன் மூலம் அதைச் செய்யுங்கள்''

உள்நாட்டின் சமூக நிலை பற்றி மட்டும் பேசுவதுடன் புரட்சிக்காரர்கள் நிறுத்திக் கொள்ளவில்லை. மனித சமூகத்தின் சுதந்திரத்துக்கு எதிராக எவ்வித ஆக்கிரமிப்புப்

## புரட்சியின் வரலாறு 1

பிரெஞ்சுப் புரட்சியின் கோரிக்கைகள் அனைத்தும் ஒரே நேரத்தில் நிறைவேறி விடவில்லை. முடியாட்சியும் சட்டெனத் தூக்கியெறியப்பட்டு விடவில்லை. தொடர்ச்சியான போராட்டங்கள், இழுபறி நிலைமைகள், துரோகம் ஆகியவற்றைக் கடந்துதான் புரட்சி வெற்றி பெற்றது. அந்நிகழ்ச்சிகளின் தொகுப்பைக் கீழே தருகிறோம்:

### பாஸ்டீல் தகர்ந்தது!

1789 மே 5ம் தேதி பிரான்சின் தேசிய அசெம்பிளியைக் கூட்டுகிறான் மன்னன். தேசிய அசெம்பிளியில் மூன்று பிரிவினர் இருந்தனர். பிரபுக்கள், மத குருமார்கள், மக்கள். இதில் அதிக பட்ச வரி செலுத்தியவர்கள் மக்கள்தான். ஆனால் ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு ஓட்டு மட்டுமே இருந்ததால் மக்கள் தரப்பிலிருந்து சொல்லப்படும் கருத்து எப்போதுமே எடுபடுவதில்லை. எனவே 'அரசியல் நிர்ணயச் சட்டத்தை மாற்று' என்ற கோரிக்கையை முன்வைத்தனர். மன்னன் மறுத்தான். அவையை இழுத்துப் பூட்டினான். அருகிலிருந்த டென்னிஸ் அரங்கத்தில் கூடிய மக்கள் பிரதிநிதிகள் புதிய அரசியல் சட்டத்தை உருவாக்காமல் இங்கிருந்து கலைவதில்லை என்று உறுதியேற்றனர். சில பிரபுக்களும் மத குருமார்களும்கூட அவர்களுடன் சேர்ந்தனர்.

ஜூலை 14: பாரிஸ் மக்கள் தன்னெழுச்சியாகத் திரண்டு சென்று பாஸ்டீ (Bastile) சிறையைத் தகர்க்கின்றனர். 'செய்தி கேள்விப்பட்ட மன்னன் "எதற்காக கலாட்டா செய்கிறார்கள்?" என்று அமைச்சர்களைக் கேட்டானாம். "கலாட்டா அல்ல மன்னர் பெருமானே இது புரட்சி!" என்று பதில் சொன்னாராம் அமைச்சர். சிறை தகர்ப்பைத் தொடர்ந்து நடுத்தரவர்க்கத்தினர் அடங்கிய புரட்சிக்கமிட்டி பாரிஸ் நகரத்தின் நிர்வாகத்தைக் கைப்பற்றியது. இதைப் பின்பற்றி நாடு முழுவதும் புரட்சி அரசாங்கங்கள் தோன்றின. விவசாயிகள் பிரபுக்களின் மாளிகைகளைச் சூறையாடினர். கடன் பத்திரங்களுக்கும், பிரபுக்களின் நிலப் பட்டாக்களுக்கும் தீ வைத்தனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

போரிலும் ஈடுபடமாட்டோம் என்று அறிவித்தார்கள்.

குடியரசின் கைக்கூலிகளிடம் இருந்து புரட்சியைப் பாதுகாக்க "இளைஞர்கள் போர் முனைக்குச் செல்லுங்கள். மணமான ஆண்கள் ஆயுதங்களைத் தயார் செய்யுங்கள்; சிப்பாய்களுக்கு உணவு கொண்டு செல்லுங்கள். பெண்கள் பாசறைகளை அமைக்கட்டும்; மருத்துவமனைகளில் சேவை செய்யட்டும். சிறுவர்கள் காயங்களுக்குக் கட்டுப் போடும் துணிகளை சேகரிக்கட்டும். முதியவர்கள் வீதிமுனைகளில் நின்று சிப்பாய்களை உற்சாகப்படுத்துங்கள்; சக்ரவர்த்திகளுக்கு எதிராக பிரச்சாரம் செய்யுங்கள்; நாட்டின் ஒற்றுமைக்காகப் பிரச்சாரம் செய்யுங்கள்" என்று அறைகூவல் விட்டது புரட்சி அரசு.

விஞ்ஞானம், கலை, கல்வி என்று பண்பாட்டின் அனைத்துத் துறைகளிலும் புதுமலர்கள் பூத்தன. புரட்சிப் படையணியின் கீதமாக இறவாப் புகழ்பெற்ற 'மார்செயில்ஸ்' கீதத்தை உருவாக்கியதன் மூலம் கோஸ்ஸெக் புரட்சியின் இசையமைப்பாளன் ஆனான். சுதந்திரத்திற்கு, சமத்துவத்திற்கு, மனித சமூகத்திற்கு, தாய் நாட்டிற்கு, இயற்கைக்கு -என்று அவனது இதயத்துடிப்பையே இசையாக மாற்றி அர்ப்பணித்தான். விஞ்ஞானமோ முன்னெப்போதும் கண்டிராத அளவு முன்னோக்கிப் பாய்ந்து சென்றது. பால்சாக், ஹியூகோ போன்ற மாபெரும் எழுத்தாளர்களை பிரான்ஸ் கருத்தரித்தது.

பேச்சுரிமை, எழுத்துரிமை, கூட்டம்கூடும் உரிமை, உயிர்வாழும் உரிமை, ஆயுதம் ஏந்தும் உரிமை அனைத்தையும் வென்றெடுத்த பிரான்ஸ் அன்றைய மனித நாகரிகத்தின் முன்வரிசையில் எக்காளமிட்டு சென்று கொண்டிருந்தது. நூற்றாண்டுகளை நொடிகளில் கடந்து சென்று கொண்டிருந்தது புரட்சி. அகன்ற விழிகளுடனும், நின்று போன இதயத் துடிப்புடனும் பிரான்சைப் பார்த்துக் கொண்டிருந்தது உலகம். ஆம்! பிரான்சில் தோன்றிய புரட்சிப் பூகம்பம் மனித சமூகத்தின் சட்டையைப் பிடித்து உலுக்கி "வா.. என்பின்னே" என்று ஆணையிட்டது!

பிரெஞ்சுப்புரட்சி மன்னராட்சியை ஒழித்து ஜனநாயகத்தை நிலைநாட்டியது என்பதும் அது முதலாளித்துவ ஜனநாயகம் மட்டுமே என்ற விஷயமும் நாம் அறிந்தது தான். ஆனால் தொழில்துறை முதலாளிகளாலேயே தலைமை தாங்கப்பட்டு நடத்தப்பட்ட புரட்சி என்றோ, புரட்சியின் தத்துவ ஆசிரியர்களான ரூஸோ, தீத்ரோ, பாபெஃப் போன்றோர் முதலாளிவர்க்கத்தின் உணர்வு பூர்வமான சேவகர்கள் என்றோ புரிந்து கொள்வது தவறு.

மன்னராட்சியும், மத நிறுவனங்களும் காலத்தின் தேவையை நிறைவு செய்யவில்லை; அவை அறிவுக்கு ஒவ்வாதவை; இனி இவையெல்லாம் ஒழிக்கப்பட்டு அவற்றினிடத்தில் நிரந்தரமான உண்மையும், இயற்கையின் அடிப்படையிலான சமத்துவமும், இழக்கவோ துறக்கவோ இயலாத

**2**

## பிரபுக்கள் ஓட்டம்! குடியரசு மலர்கிறது!

ஆகஸ்ட் 4: விவசாயிகளின் எழுச்சியில் பீதியுற்ற பல பிரபுக்கள் நாட்டைவிட்டே ஓடுகிறார்கள். அசெம்பிளி (மக்கள்) கூடுகிறது. நிலைமையைப் புரிந்துகொண்ட பிரபுக்களில் சிலர் தாங்களே முன்வந்து தங்கள் பரம்பரை சலுகைகளை தியாகம் செய்வதாக அறிவிக்கிறார்கள்; பிரபுத்துவம் ஒழிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. தாங்கள் டென்னிஸ் அரங்கத்தில் எடுத்த உறுதிமொழியை நிறைவேற்றும் பொருட்டு புதிய அரசியல் நிர்ணய சட்டத்தை தயாரிக்கத் தொடங்குகிறது அசெம்பிளி.

அக்டோபர் 5: கடும் உணவுப் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டு ஆத்திரமுற்ற மக்கள் கூட்டம் -(பெரும்பாலும் பெண்கள்) மன்னனின் வெர்சேய் அரண்மனையை முற்றுகையிடுகிறது. அரசனையும், அரசியையும் பிணையக் கைதிகளாகப் பிடித்து பாரிசுக்குக் கொண்டு வருகிறது.

கிறித்தவ மடங்களின் சொத்துக்கள் அரசுடைமையாக்கப் படுகின்றன. மன்னன் நாட்டைவிட்டுத் தப்பியோட முயன்று எல்லையில் பிடிபடுகிறான். இருந்தும் அவனை மன்னனாக அங்கீகரிக்கிறது அசெம்பிளி.

1791 அக். 1: முதல் குடியரசு அறிவிக்கப்படுகிறது. மனிதனின் அடிப்படை உரிமைகள் குறித்த பிரகடனம் வெளியிடப்படுகிறது. மன்னனை வைத்துக் கொள்வதா வேண்டாமா என்று முடிவு செய்யும் பொறுப்பு தேசிய சபைக்குத் தரப்படுகிறது. மன்னனை வைத்துக் கொள்ளலாம் என்று ஒரு கோஷ்டி உருவாகின்றது. பெரும் மக்கள் கூட்டம் மன்னனின் அரண்மனையில் புகுந்து அவனது காவலர்களைக் கொல்கிறது. மன்னன் சிறையிலிடப்படுகிறான். எல்லையில் போர் தொடங்குகிறது.

## மன்னனுக்கு மரண தண்டனை!

1792 செப். 21: பேரரசில் மன்னனை வைத்துக் கொள்வதும் இல்லையென அறிவிக்கப்படுகிறது. பாதிரிகள் அனைவரும் குடியரசின் சட்டத்தின் மீது பிரமாணம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. போப் புரட்சிக்கு பகிரங்க எதிர்ப்பு தெரிவிக்கிறார். பிரான்சில் இருந்த வாடிகனின் (போப்பின்) சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுகின்றன.

இதற்கிடையே குடியரசின் அமைச்சரவை கவிழ்கிறது. புரட்சிக் கமிட்டிகள் அதிகாரத்தை மேற்கொள்கின்றன. ஓடிப்போன பிரபுக்கள் அண்டைநாடுகளின் உதவியுடன் புரட்சியை ஒழிக்க முயல்கின்றனர். லூயி மன்னன் விசாரணைக்குட் படுத்தப்படுகிறான். அந்நியருடன் கூட்டு சேர்ந்து பிரெஞ்சு மக்களுக்கு எதிராகச் சதி செய்ததற்காக அவனது தலை (கில்லெட்டினில்) துண்டிக்கப்படுகிறது. அவனது மனைவியான, அரசி மேரி அன்டாய்னேட்டுக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டு தலை துண்டிக்கப்படுகிறது. குடியரசுக்கு எதிராகவும், மன்னனுக்கு ஆதரவாகவும் செயல்பட்ட ஆயிரக்கணக்கான கைக்கூலிகள் கில்லெட்டினுக்குப் பலியாகின்றனர்.

## ஜாகோபின் கழகம்:

1789 இல் துவக்கப்பட்ட புரட்சிக்குழு. இக்கழகத்தைச் சேர்ந்தோர் தீவிர ஜனநாயகவாதிகள். 1791 இல் மன்னன் தப்பியோட முயன்றதிலிருந்து இவர்களின் அரசியல் செல்வாக்கு பெறத் தொடங்கியது. 1792 இல் அமைச்சரவை கவிழ்ந்தவுடன் இவர்கள்தான் உறுதியாக நின்று முடியரசவாதிகளின் கலகத்தையும் அயல்நாட்டு ஆக்கிரமிப்பையும் ஒருங்கே முறியடித்தார்கள். பிரெஞ்சுப் புரட்சியின் மாபெரும் தலைவர்களான ரோபஸ்பியே, மாரட், டான்டன் ஆகியோர் இக்கழகத்தைச் சேர்ந்தவர்களே!

---

மனித உரிமைகளும் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதே அவர்களது லட்சியமாக இருந்தது. அவர்கள் முதலாளி வர்க்கத்திற்காகப் புரட்சி செய்யவில்லை; மனிதகுலம் முழுமைக்குமாகச் செய்வதாகத்தான் அறிவித்தார்கள்; அவ்வாறுதான் நம்பினார்கள். அவர்கள் மனித குலத்தின் விடுதலை என்று பேசினார்களே ஒழிய பாட்டாளிவர்க்கத்தின் சர்வாதிகாரம் பற்றிப் பேசவில்லை; காரணம் அவர்களால் பேச இயலாது. வரலாறு அவர்களது சிந்தனைக்கு விதித்திருந்த வரம்பு அது. ஸ்பார்ட்டகஸ் சோசலிசத்திற்காகப் போராடியிருக்க முடியாது!

நீத்ரோவிடம் இயங்கியலின் துவக்கவடிவம் தென்பட்டதையும், பாபெஃப் இன் கற்பனா சோசலிசத்தையும், ரூசோ புரட்சியில் வன்முறையின் பங்கு குறித்துக் குறிப்பிட்டதையும் எங்கெல்ஸ் நினைவு கூறுகிறார். இவர்கள் மட்டுமல்ல; பிரெஞ்சுப் புரட்சியின் மைந்தர்களான போராளிகள் புரட்சியின் ஊடாக எழுப்பிய முழக்கங்கள், மனித குல விடுதலையைக் கோரும் அவர்களது தணிக்கவொண்ணாத தாகத்தைத்தான் வெளிப்படுத்துகின்றன. புரட்சியின் உக்கிரமானதொரு கட்டத்தில் அவர்கள் அறிவித்தார்கள். "எல்லா அரசுகளுக்கும் நாங்கள் எதிரிகள்! எல்லா மக்களுக்கும் நாங்கள் நண்பர்கள்" என்று. "முடியாட்சியின் நுகத்தடியிலிருந்து விடுதலை பெறுங்கள்! நாங்கள் உதவுகிறோம்!" என்று பகிரங்கமாகப் பிற நாட்டு மக்களுக்குப் பிரகடனம் செய்தார்கள். 1793 இல் முடியரசவாதிகளின் கலகத்தை ஈவிரக்கமின்றி ஒடுக்கினார்கள். அவர்களுக்கு ஜனநாயகம் கிடையாது என்பதை பகிரங்கமாக அறிவித்தார்கள். 1794க்குப் பின் எதிர்ப்புரட்சி சக்திகளின் கை மேலோங்கிய போது உவகையுடன் புரட்சியின் நலனுக்காக - மனிதகுலத்தின் நலனுக்காக தம் உயிரை ஈந்தார்கள்.

அறிவின் ஆட்சி குறித்த தனது கோட்பாடு மக்களுக்கெதிரான பயங்கர ஆட்சியாக மாறும் என்று ரூசோ கற்பனையும் செய்திருக்க முடியாது. ஆனால் நடந்தது அது தான். தனது ஆற்றலில் நம்பிக்கை இழந்த முதலாளிவர்க்கம் நெப்போலியனின் எதேச்சாதிகாரத்திடம் சரணடைந்தது. சுதந்திரம், சிறு விவசாயிகளும், சிறு முதலாளிகளும் தங்கள் சொத்தை விற்பதற்கான சுதந்திரமாக



www.tamilrangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மாறியது. எங்கெல்ஸின் சொற்களின் சொல்வதானால் ''வாளுக்குப் பதிலாகத் தங்கம் வந்துவிட்டது; முதலிரவு உரிமை நிலப்பிரபுக்களிடமிருந்து முதலாளித்துவப் பட்டறை அதிபர்களுக்கு மாற்றப்பட்டது''

ஆனால் வரலாற்றின் சக்கரம் நிற்குமா என்ன? முதலாளி வர்க்கம் லூயி மன்னனைப் போலவே அப்படித்தான் நினைத்துக் கொண்டிருந்தது. அதன் பிரமையை உடைப்பதற்குக் கம்யூனார்டுகள் (பாரிஸ் கம்யூனின் தொழிலாளி வர்க்கப் போராளிகள்) தோன்ற வேண்டியிருந்தது. 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் பிரான்சைத் தனது அச்சாகக் கொண்டுதான் உலகம் சுழன்றது என்பதை யாரால் மறுக்க முடியும்?

◆ ◇ ◆ ■ சூரியன்



மன்னன் 16ம் லூயி

நன்றி : புதியகலாச்சாரம்.

## வாசகர்களுக்கு!

இடமின்மை காரணமாக
மார்க்சிசமும் தளைய சிங்கமும்;
ஈழத்தில் ரொக்கிய அபாயம்;
சல்வடோர் டாலியும் சர்யலிசமும்
ஆகிய தொடர்
கட்டுரைகள் பிரசுரிக்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

www.tamilrangam.net

# திரையுலகமேதை சத்தியஜித்ரேயின் "ஞானசத்துரு"



பிரச்சனையின் ஆணிவேர்வரைசென்று கலைத்துவமாக அலசும் பாங்கும் ஒரு சமத்துவத்திற்கான அடித்தளத்தைப் போடும் ஆவேச மனப்பாங்கும் இவரது திரைப்படங்களின் உயிராகும். - அருந்ததி.

இப்போது பாரிஸ் நகரில் திரையிடப்பட்டிருக்கும் சத்தியஜித்ரேயின் 'ஞான சத்துரு' வங்காள மொழி பேசும் திரைப்படம் இவரது இருபத்தியாறுவது கலைப்படைப்பாகும். இந்திய சினிமாவை உலகதரத்திற்கு உயர்த்திய சத்தியஜித்ரே உலகில் புகழ்பெற்ற முன்னணி இயக்குனர்களில் ஒருவராகத்திகழ்வது குறிப்பிடத்தக்கது. யதார்த்தபூர்வமான சித்தரிப்புடன், மானிட நேசத்தை, பொதுவுடமைக் கருத்துக்களைபிரச்சார ரீதியாக அல்லாது கலைத்துவ ரீதியில் வெளிப்படுத்துவது இவரது தனித்துவமும் இவருக்கேயுரிய தனிச் சிறப்புமாகும்.

சத்தியஜித்ரேயின் ஆரம்பகாலத் திரைப்படங்களான பதர்பாஞ்சாலி, சாருலதா, ஆசானிசங்கேத் போன்றவை சர்வதேச ரீதியாக மாபெரும் பாராட்டுதல்களையும், பல்வேறுபட்ட விருதுகளையும் பெற்றதோடு ரேயினது திரைப்படங்கள்பற்றிய எதிர்பார்ப்பினையும், வரவேற்பினையும்கூட அவை சர்வதேச அரங்கத்தில் அவருக்கு பெற்றுக்கொடுத்தன. இந்திய முதலாளித்துவத்தின் போட்டிச் சந்தையில்நிறுத்தப்படும் ஓர் வர்த்தகப் பண்டமாக மாற்றப்பட்டு, கலைத்துவம் குன்றி மசாலாத்தனமாக வெளிவரும் இந்தியாவின் வங்காளம், மலையாளம் தவிர்ந்த ஏனைய மொழித் திரைப்படங்கள், குறிப்பாக இந்தி, தமிழ் சினிமாக்கள் ஏற்படுத்திய தாக்கம் இந்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

தியா, இலங்கை போன்ற நாடுகளில் சத்தியஜித்ரே பற்றிய முழுமையான அறிதலுக்கும், புரிந்துணர்வுக்கும் வழி வகுக்காமல் போனது துரதிஷ்டமே. இதன் காரணமாகவோ என்னவோ இவர், 'உள்ளூரில் விலை போகாதவர்' என சிலரால் எள்ளி - நகையாடப்பட்டதும் 'பரிசில்களுக்காகவே படமெடுப்பவர்' என சில விமர்சகர்களால் குறிப்பிடப்பட்டதும் உண்டு.

நாற்பதாண்டு காலமாக திரையுலகிலிருக்கும் சத்தியஜித்ரேயின் இருபத்தியாறுவது படம் 'ஞானசத்துரு.' திரையுலகில் நுழைந்த பத்து ஆண்டுகளிலேயே நூறுபடம் இருநூறு படங்களை முடித்து விழாக் கொண்டாடும் தமிழகத்து திரைக் கலைஞர்களை அறிந்திருக்கும் சினிமா ரசிகர்களுக்கு இது ஆச்சரியமான செய்திதான்.

இந்தியாவின் இதயத்தைப் படம்பிடித்துக்காட்டும் இவரது திரைப்படங்கள்ஒவ்வொன்றும் இவரது கடும் உழைப்பினுல் உருவாக்கப்படுபவை. ஏழைகள், சுரண்டப்படுவோர், நிலமற்ற விவசாயிகள், கூலித்தொழிலாளர்கள் என்பவர்களது வாழ்க்கை - தான் இவரது திரைப்படங்களின் கருக்களாக அமைகின்றன. பிரச்சனையின் ஆணிவேர் வரை சென்று கலைத்துவமாக அலசும் பாங்கும், ஒரு சமத்துவத்திற்கான அடித்தளத்தைப் போடும்ஆவேச மனப்பாங்கும் இவரது திரைப்படங்களின் உயிராகும்.

'ஞானசத்துரு' திரைப்படமானது நோர்வே எழுத்தாளர் 'ஹென்றிக் இப்சனின் (ENEMY OF THE PEOPLE) மக்களின் எதிரி என்ற நாடகத்தை தழுவி எடுக்கப்பட்டது. தொண்ணூறு நிமிடங்கள் வரை ஓடும் இத்திரைப்படத்தில் திரைப்படத்தின் பிரதான பாத்திரமாகிய டாக்டர் குப்தாவின் வீட்டு மையப்பகுதிதான் தொண்ணூற்றைம்பது வீதமான கதை நகர்வுத் தளமாகும். டாக்டரின் அறை, ஒரு கோயிலின் முகப்பு ஒரு கூட்ட மண்டபம் என்பன சில நிமிடங்கள் வரை வந்துபோகும் காட்சிகள். சினிமா என்பது மிகவேககமாக நகரும் சாதனம் எனவும், காட்சிகள் ஒவ்வொன்றும், சில நிமிடங்களுக்குமேல் நீடிக்கக் கூடாது எனவும்' தமிழ்ச் சினிமாவின் தாக்கத்தினுல் சினிமாவை நோக்கும் பலரது சினிமா பற்றிய பிழையான பார்வையும் இங்கு கவனிக்கத்தக்கது.

டாக்டர் குப்தா மக்கள் தேசம்மிகுந்தவர், தனது கிராமத்தில் அதிகமான மக்களுக்கு கொடிய காய்ச்சல், வயிற்றோட்டம் முதலிய நோய்கள் வருவதற்கும்அதனுல் பலர் இறப்பதற்கும் காரணம், கிராமத்திலுள்ள கோயிலில் வழங்கப்படும்தீர்த்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

த்தை ஊர்மக்கள் குடிப்பதனால் என்று தனது ஆராய்ச்சி முடிவுக்கு வருகிறார் டாக்டர் குப்தா. காரணம் கோயில் உள்ளிருந்து வரும் ஊற்றுநீர் அழுக்கடைந்த பகுதிகளினூடாக வருகிறது. எனவே அது வந்து விழும் இடத்தில் நோய்க்கிருமிகளையும்சேர்த்துக் கொண்டு வந்து விழுகிறது. மக்கள் பெருவாரியாக வந்து தீர்த்தத்தை வாங்கிப் பருகுவதும், அதனை அவர்கள் பாத்திரங்களில் அடைத்து வீட்டிற்கு எடுத்துச் செல்வதும் டாக்டரின் மனதைப் பெரிதும் பாதிக்கிறது. நோயின் உற்பத்தி மையமாக விளங்கும் இக்கோயிலின் உண்மையை மக்கள் முன் கொண்டு வருவதற்கும் டாக்டரினால் எடுத்துக்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளும் கோயில் வருமானம்மூலமாக ஊர்ப்பணத்தைக் கொள்ளையடிக்கும் சமூக விரோதிகளினால் முறியடிக்கப்படுகின்றன.

டாக்டர்குப்தாவின் ஆராய்ச்சி முடிவும், அதனை அவர் மக்கள் முன்கொண்டு செல்ல எடுத்துக்கொள்ளும் பிரயத்தனமும், கோயில் முதலாளியையும், அவரது பங்காளியாகவும் முனிசிபல் சேர்மனாகவும் விளங்கும் டாக்டர் குப்தாவின் சகோதரர் ஒருவரையும் சினம் கொள்ளவைக்கின்றன. அவர்களிருவரும் டாக்டரின் எதிரியாகின்றனர்.

டாக்டர் குப்தா தனது ஆராய்ச்சி முடிவுகளை விரிவாக, மக்களுக்கு விளக்கும்வகையில் எழுதி பத்திரிகை ஒன்றுக்கு அனுப்புகிறார். ஆனால் பத்திரிகை முதலாளியும் அதனைப் பிரசுரிக்க மறுத்துவிடுகிறார். பணத்தின் செல்வாக்கு அங்கும் விளையாடுகிறது. அதிர்ச்சியும், ஆத்திரமடைந்துபோன டாக்டர் குப்தா, முனிசிபல் சேர்மனாகவுள்ள தனது சகோதரரிடம் 'கூட்டம் போட்டு மக்களுக்கு உண்மையைச் சொல்வேன்' என்று ஆவேசமாக உரைக்கிறார். தனது மகள், நண்பர் சிலரது உதவியுடன் கூட்டத்திற்கான போஸ்டர்களை அடித்து ஊர்முழுக்க ஒட்டுகிறார். கூட்டம் கூடுகிறது. கோயில் வருமானத்தின் மூலம் தங்களை வளர்த்துக் கொண்டவர்கள் கூட்டத்திலும் வந்து கலாட்டா செய்து கூட்டத்தைக் குழப்புகிறார்கள். திரைப்படத்தில் சத்தியஜித்ரே மிக அதிகமாகப் பளிச்சிடுவது இந்த இடத்தில்தான். மக்களின் மூடநம்பிக்கை, கடவுள் பக்தி என்பவற்றை சமூக விரோதிகள் எவ்வாறு தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகிறார்கள் என்பதை மிகத் துல்லியமாக இப்படத்தில் எடுத்துக்காட்டுகிறார். கூட்டத்தில் அவர்கள் கேட்கும் கேள்விகள் டாக்டர் குப்தாவைச் சங்கடப்படுத்துகின்றன. அனைத்தும் குதர்க்கமான கேள்விகள், கோயிலுக்கு சராசரியாக பதினையாயிரம் பேர்வரை வருகிறார்கள், நோய் எத்தனை பேருக்கு வருகிறது எனக் கேட்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

ஐநூறு பேர்களுக்கு என டாக்டர் பரிசீலிக்கிறார். தீர்த்தம் பருகும் அனைவருக்கும் நோய் வருவதில்லையே ஆகவே நோய்க்கு தீர்த்தம் காரணமல்ல என்று கூட்டத்தில் வந்திருந்தவர்களுக்கு கூறி, 'இது டாக்டர் குப்தாவின் பிழையான ஏமாற்றுவேலை, மக்களையும் கோயிலையும் இவர் அவமதிக்கிறார்' என்று மக்களை தூண்டிவிட அங்கே வெடிச் சத்தமும், மேடையை நோக்கி கற்களை வீசுவதும் நிகழ்கிறது. மேடையின் பின் வழியாக டாக்டர் குப்தாவும் அவரது குடும்பமும் வெளியேறி தமது வீட்டுக்குள் நுழைகின்றனர். அவரது வீட்டுக்கும் கல்லெறி விழுகிறது. 'டாக்டர் குப்தா ஒரு மக்களின் எதிரி' என்ற கோசமும் எழுகிறது. மக்களை நேசித்தவர், மக்களின் நல்வாழ்க்கைக்காகப் பாடுபட்டவர் மக்களின் எதிரியாக்கப்படுகிறார்.

மக்களின் அறியாமையையும், சமூக விரோதிகளின் காட்டுத்தர்பாரையும் கண்டு மனங்கலங்குகிறார் டாக்டர் குப்தா. ஆனால் இவரது நல்நோக்கத்தில் மதிப்பு வைத்திருக்கும் பிரஸ்ரிப்போட்டர்' ஒருவரும், இவரது மகள் நண்பர் ஆகியோரும் டாக்டருக்கு நம்பிக்கையூட்டுகின்றனர். அவர்களது முயற்சிக்குரிய வழிகள் திறக்கின்றன. டாக்டர் - குப்தா உற்சாகத்தால் பூரிக்கிறார். வெளியே 'டாக்டர் குப்தா வாழ்க' . . என்ற கோசம் ஒலிக்க போராட்டம் பற்றிய நம்பிக்கையை ஆளமாக மக்களின் மனங்களில் விதைத்துக்கொண்டு திரைப்படம் முடிவடைகிறது. எந்த அரசியல் பின்னணியோ, தேவையற்ற அரசியல் கோசங்களோ எதுவும் இல்லாமல் சுரண்டலுக்கெதிராக, எவ்வாறு சூழ்நிலைகள் போராட்டத்திற்கு உந்தித்தள்ளும் என்பதை மிக அற்புதமாக தனக்கேயுரிய மேதைத்தனத்துடன் வெளிப்படுத்துகிறார் சத்தியஜித்ரே. எளிமையான நேர்த்தியான படப்பிடிப்பு, தேவையான அளவு பின்னணி இசை பாத்திரங்களுக்கு உயிரூட்டும் திறமைமிக்க நடிகர்கள் என்பவற்றினால் திரைப்படம் பாராட்டுக்களைச் சுலபமாகப் பெற்றுவிடுகிறது.

டாக்டர் குப்தாவாக நடித்திருப்பவர் அனேக சிறப்படைப்புக்களில் நடித்திருக்கும் அனுபவமும், திறமையுமிக்க நடிகர் சௌமித்ரா சட்டர்ஜி ஆகும். இந்த திரைப்படத்தின் பிரதியாக்கம், நெறியாள்கை என்பவற்றோடு இதன் இசையையும் சத்தியஜித்ரேயே அமைத்துள்ளார்.

www.tamilrangam.net

விஞ்ஞான பூர்வமான ஒரு கலைத்துவ சாதனையாகிய சினிமாவில் வாழ்க்கை, உலகு, அனுபவம், அறிவியல், கலைத்துவம் அனைத்தையும் புறக்கணித்ததான தமிழ்ச்சினிமாக்களில் அதிக பட்ச பரிட்சயம் கொண்டவர்கள் சத்தியஜித்ரே பற்றியும், அவரது திரைப்படங்கள் பற்றியும் அறிந்துகொள்வது கலை, சமூகம், வாழ்க்கை பற்றிய புதிய பிரக்ஞையையும், ஒரு சிந்தனை மாற்றத்தையும் ஏற்படுத்தும் என்பது உண்மையே. அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்த பிரான்ஸ் நாட்டு ஜனாதிபதி திரு. மித்றறன்ட் கல்கத்தா சென்று அங்கு வசிக்கும் சத்தியஜித்திரேயிற்கு அதியுயர்விருது ஒன்றினை அளித்துக் கௌரவித்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

---

## படைப்பாளிகளே!

உங்களது ஆக்கங்களை 'தேடல்' சஞ்சிகையில் பிரசுரித்து, தேடுதல் மனோபாவத்தை வாசகர்களிடத்தே இன்னும் வளர்த்தெடுக்க முன்வாருங்கள்.

கலை, இலக்கியம், அரசியல் மற்றும் அனைத்துத் துறைகளிலுமான ஆக்கபூர்வமான விடயங்களும், சஞ்சிகை குறித்த உங்களது ஆலோசனைகளும் எம்மால் எதிர்பார்க்கப்படுகின்றன.

– தேடல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilrangam.net

வாசகர்களே....!

**உங்கள் எண்ணங்களை தேடலுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்!**

**தற்போதைய தொடர்புகட்கு**

P. SIVAPATHAM,
O.P.A.L,
110 AVENUE DE GE. LECLER[illegible]
92100 BOULOGNE.

நிரந்தர முகவரி பின்னர் அறிவிக்கப்படும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்